## அத்தியாயம் 6

# பாவத்தை தவிர்த்தல்

பவுல், புறஜாதியார்களுக்கான அப்போஸ்தலன், ஒரு பிரசங்கியார், தத்துவமேதை அல்ல. 1 கொரிந்தியர் கடிதத்தில் பவுல் நற்செய்தியின் இறையியலை வழங்கினார், ஆனால் அதன் விவரங்களை விளக்க சிறிது நேரமே செலவிட்டுள்ளார். கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களில் அநேகர் தங்கள் புறமத சமூகத்தை குறித்த முதல் அறிவை உடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த அலுவல்களையே கவனிக்கிற நடைமுறை மக்களாயிருக்கிறார்கள். பவுலின் வாசகர்கள், பெரும்பான்மையானவர்கள், கிரேக்க சமூக பொருளாதார வாழ்வின் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளவர்கள் அல்ல, உயிர் வாழ்வதற்கென்று கடினமாக உழைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உள்ளவர்களும் அல்ல. அவர்கள் சில மிதமான செழிப்புடன் இருந்தனர், ரோம உலகத்தில் செழித்திருந்த அதிநவீன தத்துவ வட்டாரங்களில் என்ன நடக்கிறது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து, பாவத்தை விட்டு மீட்க தம் குமாரனை அனுப்பிய ஒரே உண்மையான தேவனின் செய்திக்கு அவர்களை கீழ்ப்படுத்தும்படி புறமத வழி முறையை ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்களை பவுல் வழிநடத்தினார். சுவிசேஷத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டது அவர்களுக்கு ஒரு முக்கியமான தொடக்க புள்ளியாக இருந்தது.

கொரிந்துவிலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் பல மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. தேவனுடைய இயல்பைப் பற்றி புதிய கருத்துக்களைத் தழுவியதற்குக் கூடுதலாக, தேவனு டைய மக்களாக ஒருவருக்கொருவர் எப்படி நடந்து கொள்வது என்பதை கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. 1 கொரிந்தியரில் பவுலுடைய ஏமாற்றம் என்னவெனில், சக விசுவாசிகள் மெதுவாகவே முன்னேறிக் கொண்டிருந்தார்கள். தங்களுக்கு பிடித்த மான ஆசிரியர்களுக்கு விசுவாசமாயிருப்பதில் வளர்ந்திருந்தனர். தங்கள் காலத்திய புறஜாதி மக்களின் வழிகளைப் பின்பற்றி கட்சிகளாக பிரிந்து செயல்பட்டனர், அதற்கு காரணம் அவர்களின் சுய விருப்பு வெறுப்பு சார்ந்த காரணங்களே அன்றி போதனைகள் காரணம் அல்ல. கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒற்றுமையை அவர்கள் அன்பினாலே ஒருவரையொருவர் கவர்ந்திழுப்பதிற்குப் பதிலாக வார்த்தைகளுக்கு இடையே உள்ள நுட்பமான வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் தந்து

கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒற்றுமையை தியாகம் செய்தனர்.

## சக கிறிஸ்தவர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பதை தவிர்த்தல் (6:1-11)[1]

விசுவாசிகள் ஆசிரியர்களுக்கு விசுவாசமாக இருந்தபோது, தேவபக்தியோடு கூடிய வாழ்க்கைக்கு சவால் விடுக்கும் ஒழுக்க நெறி முறைகளை அவர்கள் புறக்கணித்தனர். இந்த சபை அதன் பழைய வாழ்க்கையை விட்டுவிட்டு புதியதொரு வாழ்க்கையை பின்பற்ற வேண்டிய தன் அவசியத்தை இரண்டு விஷயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. (1) தந்தையின் மனைவியுடன் பகிரங்கமாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மனிதனை, அவர்களுக்கு சொந்தமானவர்களில் ஒருவனை, கொரிந்திய கிறிஸ்தவர்கள் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். (2) அவிசுவாசிகளுக்கு முன்பாக தங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளை தீர்த்து வைக்க சகோதரர்கள் நீதி மன்றத்தை நாடினர்.

கொரிந்து சபை சந்தித்த சரியான சூழ் நிலையை வேறு எந்த சபையிலும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாததாக இருந்தது, பழங் காலத்து சபையிலோ அல்லது தற்காலத்து சபையிலோ. இருப்பினும், ஒழுக்க நெறி பிரச்சனைகளை கையாளுகிறவர் களுக்கு, எந்த வகை பிரச்சனையாக இருந்தாலும், பவுலின் அறிவுரைகள் இன்றைய காலத்திற்கும் மிகவும் பொருத்தமான வைகளாக இருக்கிறது. பவுல் பிரசங்கித்த பிரத்தியேகங்களிலிருந்து தேவையானவற்றை பிரித்தெடுக்கும் கடமையை தேவன் கிறிஸ்தவர்களுக்கு கொடுத்திருக்கிறார். இதே போன்ற சிக்கல்களை சமாளிப்பதற்கே இந்த நியமங்கள் நமக்கு வழி காட்டுகிறது. பழைய புறஜாதி நடைமுறைகளுக்கும் கிறிஸ்தவ கோட்பாடு மற்றும் ஒழுக்கநெறியின் புதுமைக்கும் இடையே உள்ள பதட்டத்தை பவுல் நன்றாக அறிந்திருந்தார். கிறிஸ்தவர்கள் தங்கள் பழைய பழக்க வழக்கங்களை விட்டு வித்தியாசமாக வாழ வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார். இந்த உதாரணத்தில் ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு இடத்திற்கும் பொருந்துகிற கிறிஸ்தவர்க ளுக்கான முக்கியமான தாக்கங்கள் உண்டு.

### பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் (6:1-3)

**1உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன? 2பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்பவழக்குகளைத் தீர்க்க**

**நீங்கள் அபாத்திரரா? [3]தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக் கூடா திருக்கிறது எப்படி?**

**வசனம் 1.** தந்தையின் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனுடைய பிரச்சினையைப் போலவே, சகோதரர்களுக்கு இடையில் உள்ள வழக்குகளின் பிரச்சினையைப் பற்றியும் பவுல் நம்பிக்கையற்றவராக இருந்தார். அவர் முன்னமே இப்படி எழுதினார், "உங்களுக்குள்ளே விபச்சாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே ..." (5:1); மற்றும் இங்கு அவர் கேட்கிறார், **உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால் ... அநீதக்காரரிடத்தில் போகத்துணிகிற தென்ன?** என்று அப்போஸ்தலர் ஆச்சரியப்படுகிறார். இந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான சமுதாய வாழ்வின் அடிப்படை அர்த்தத்தை இழந்திருப்பார்கள் என்பதா? விபச்சாரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனின் பாவத்தை கண்டும் காணாததுபோல இருந்ததினால், சபையானது அதன் சமூகப் பொறுப்பைத் தவிர்த்துக் கொண்டிருந்தது. சரியானவைகள் மற்றும் தவறானவைகள் எது என்று நிதானித்து சபையின் ஒழுங்குமுறைகளை அமல் படுத்தும் கடமை அதன் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் உண்டு.

> அதிர்ச்சியளிக்கும் ஒரு தவறான காரியத்தை தங்கள் நடுவில் நியாயந்தீர்க்காமல் விட்டுவிட்டது மட்டுமல்ல; அங்கத்தினர் களுக்கிடையிலான நிதி தொடர்பான அற்பமான சர்ச்சைகளுக்கு, அவர்கள் வெளியில் உள்ள நீதிபதிகளை அநேகமாக காலனித்துவ நீதிபதிகளை நாடினர் (6:1-11).[2]

தந்தையின் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனின் ஒழுக்கக்கேடு பற்றியும் விசுவாசிகளுக்கு இடையே உள்ள வழக்குகளை மதச்சார்பற்ற நீதிமன்றங்களில் எடுத்துச்சென்றது பற்றியும் பவுலின் கவனத்திற்கு அவருடைய நண்பர்கள் கொண்டு வந்தார்கள். ஸ்தேவான், பொர்த்துனாத்து, மற்றும் அகாயு போன்றவர்கள் சபையிலிருந்து எடுத்துவந்த கடிதத்தில் இந்த பிரச்சனைகளை பற்றிக் குறிப்பிடவில்லை (16:17; 7:1). குலோவேயாளின் வீட்டாரே (1:11) பவுலின் தகவலுக்கு ஆதாரமாக இருக்கலாம். 6:12-20இல் குறிப்பிடப்பட்டிருக்கும் விபச்சார பாவத்தை குறித்த பொருளுக்கு பவுல் திரும்பி வரும் வரையில் கட்டுப்பாடற்ற அங்கத்தினர்களை ஒழுங்கு படுத்துதல் மறைவாக பின்னணியத்திலே இருந்தது.

கி.பி. 50ல் கொரிந்து பட்டணத்தில் காணப்பட்ட கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை கணிப்பது கடினமான ஒன்று. காயு என்பவனுடைய வீட்டில் (ரோமர் 16:23) சபை கூடினபடியால் சபையானது பெரியதாயிருக்க வாய்ப்பில்லை. ஒருவேளை ஐம்பது அல்லது நூறு

நபர்களைக்கொண்ட சமுதாயத்தில், ஒரு விசுவாசிக்கு எதிராக மற்றொரு விசுவாசி வழக்கு தொடுப்பது ஒரு பொதுவான நிகழ்வு ஆக இருப்பது அரிது. ஒரு வேளை, ஒரு குறிப்பிட்ட வழக்கு அப்போஸ்தலரின் கவனத்திற்கு வந்திருக்கலாம். புறஜாதி மக்கள் நடுவில் வாழ்ந்து கொண்டிருந்த கிறிஸ்தவர்கள் நிதி மற்றும் சொத்து விஷயங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நகர நீதிமன்றங்களுக்குச் செல்வது பழக்கமாகி விட்டது. இந்த விஷயத்தில் பவுலின் கோபத்திற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, மதச் சார்பற்ற நீதிமன்றங்கள் ஊழல் நிறைந்ததாக காணப்பட்டது, மற்றொன்று யூதர்கள் நீதி வழங்குவதில் ஒரு நேர்மறையான மாதிரி என்று பவுல் அறிந்திருந்தார். ரோம ஆட்சியின் கீழ் கூட, யூதேயாவிலும் யூத மக்கள் இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் எல்லாம் நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

6:1ல் **அநீதியுள்ளவர்களுக்கு** (οἱ ἄδικοι, *hoi adikoi*) முன்பாக வழக்கை எடுத்துச்செல்வதைக் குறித்து பவுல் புகார் அளிக்கையில், அவர் ரோம உலகத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளை சாதாரணமாக மதிப்பீடு செய்யவில்லை. பணக்காரர்கள் நீதிமன்றங்களை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர்; இந்தச் சூழலில் பாரபட்சமற்ற நீதி வழங்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. ஏழைகள் அபூர்வமாக நீதி மன்றங்களுக்குச் சென்றனர்; அப்படி செல்கின்ற போது நியாயமான விசாரணைக்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே காணப்பட்டது. (David E. Garland) டேவிட் ஈ கார்லேண்ட் பின்வரும் மதிப்பீடை தருகிறார்: “இந்த சகாப்தத்தின் சிவில் நீதிமன்றங்களில் பாரபட்சமின்மை குறைவாகவும், ஊழல் அதிகமாகவும் இருப்பதை சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.”[3] சிசரோ, நன்கு அறியப்பட்ட எழுத்தாளர், வழக்கறிஞர் மற்றும் அரசியல்வாதி, முதல் நூற்றாண்டில் ரோமர்களாலும் வெளி நாட்டினர்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஒரு கருத்தை கோரிக்கையாக வைத்தார்: “இந்த நீதி மன்றங்கள் … எந்தவொரு மனிதனையும் குற்றவாளி என்று தீர்க்காது, குற்றவாளியானால், அவன் பணம் உடையவனாக இருந்தால் மட்டுமே.”[4] யாக்கோபு நிருபத்தை எழுதிய ஆசிரியர் கேட்டதாவது, “ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்? அவர் களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்?” (யாக். 2:6).

விசுவாசிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை தீர்த்துக் கொள்ள ரோம நீதி அமைப்பின் இரண்டு அடுக்கு முறையை பவுல் விரும்பவில்லை- ஒன்று பணக்காரர்களுக்கானது மற்றொன்று ஏழைகளுக்கானது. கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களில் சிலர் ஏழைகள், பலவீனமானவர்கள், ஆனால் மற்ற அங்கத்தினர்கள் ஒரு

பெரும் அளவிலான செல்வத்தைக் கொண்டுள்ளனர் என்றும், மதச்சார்பற்ற உலகில் அவர்கள் உயர்ந்த நிலையை அடைந்திருந்தனர் என்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சபை கூடிவரும் போது பயன்படுத்துவதற்கென்று காயு தன் பெரிய வீட்டை தந்திருந்தான். கொரிந்துவில் உள்ள எரஸ்துவும் ஒரு முக்கிய அரசு வேலையை பெற்றிருக்கலாம் (காண்க ரோமர் 16:23). ஸ்தேவான் தன்னுடன் இரண்டு அடிமைகளை எபேசுவில் உள்ள பவுலுடன் கலந்தாலோசிக்கும்படி கொண்டு வந்தார். செல்வமும் அந்தஸ்தும் உடைய சில கொரிந்திய கிறிஸ்தவர்கள் தங்களுக்கு நிகரானவர்களுடன் மட்டுமே உணவை பகிர்ந்து கொண்டனர், ஆனால் தங்களை விட செல்வத்திலும் அந்தஸ்திலும் குறைவானவர் களுடன் உணவை பகிர்ந்துகொள்ள மறுத்து விட்டனர் (1 கொரி. 11:21). கொரிந்துவிலிருந்த ஏழை கிறிஸ்தவர்கள், செல்வந்த சகோதரர்களால் எதிர்க்கப்பட்ட சமயத்தில் மதச் சார்பற்ற நீதி மன்றங்களில் அவர்களுக்கான வெற்றி வாய்ப்பானது மிகவும் குறைவாகவே இருக்கிறது என்று பவுல் சந்தேகத்திற்கு இடமின்றி அறிந்திருந்தார். அத்தகைய சமத்துவமின்மை அவரை வருத்தப்படுத்தியது. தனிப்பட்ட முறையில், ரோம நீதி மன்றங்கள் நீதி வழங்குவதில் தோல்வியடைந்திருந்ததை பவுல் அறிந்திருந்தார். பிலிப்பி பட்டணத்தில், பொது இடத்தில் பவுலை அடித்து இழுத்துச் சென்றனர். தன் வழக்கை நியாயப்படுத்துவதற்கான எந்த வாய்ப்பும் அவருக்கு கொடுக்கப்படவில்லை (அப். 16:19). எபேசுவில், நீதிமன்றக் கட்டுப்பாடு இல்லாத போது டெமட்ரியஸ் ஒரு கலவரத்தை தூண்டிவிட்டார் (அப். 19:24, 29). அப்போஸ்தலன் தன்னுடைய வாழ்க்கையை கிட்டத்தட்ட இந்த சூழலில் இழந்து விட்டார் (2 கொரி. 1:8, 9). பேலிக்ஸ் பவுலை சிறைச்சாலையில் வைத்து பின்னர் தன்னை விடுதலை பண்ணும்படி பவுல் அவனுக்கு பணம் கொடுப்பானென்று நம்பியிருந்தான் (அப். 24:26). பரிசுத்த வான்களுக்கு முன்பாக செல்வதற்கு பதிலாக அநீதியுள்ளவர்களுக்கு முன்பாக நீதிக்கென்று சென்றபடியால் கொரிந்திய கிறிஸ்தவர்கள் மேல் பவுல் கோபப்பட்டதற்கு நியாயமான காரணம் இருந்தது (1 கொரி. 6:1).

ரோம நீதித்துறை நடவடிக்கைகளை குறித்த குறைவான கருத்தினால், யூத சமூகங்கள் நீதி வழங்கிய விதத்தில் பவுல் ஒரு நேர்மறையான மாதிரியைக் கொண்டிருந்தார். சந்தேகத்திற்கு இட மின்றி, பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை திட்டமிடுவதற்காக எருசலேமிலிருந்த யூத நீதி மன்றத்திற்கு கிலவுதியு லீசியா பணித்திருந்தார் (அப். 22:30; காண்க 23:26; 24:7, 22). ரோமர்கள் தாங்கள் வெற்றி கொண்ட மக்கள் தங்கள் சொந்த சிவில் மற்றும் சட்ட விஷயங்களை நிர்வாகிப்பதில் பிரியமாயிருந்தனர். யூதர்கள் பிலாத்துவுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தபோது, “யாரையும்

கொல்ல எங்களுக்கு அனுமதி இல்லை" (யோவான் 18:31) என்று சொன்னது பொய்யான கூற்றாக இருந்தது. யூதா ஆளும் வர்க்கம் இயேசுவை நகரத்திற்கு வெளியே அழைத்துச் சென்று கல்லெறிந்தது, ஸ்தேவான் விஷயத்தில் செய்ததைப் போல, அறிந்திருக்க வாய்ப்பு குறைவாகவே இருக்கிறது (அப். 7:58). அரசியல் காரணங்களுக்காக, ஆசாரிய பிரிவினர் இயேசுவின் மரணத்திற்கான காரணம் ரோமர்களையே சாரும் என்று குற்றம் சாட்டினர். யூதர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பிலாத்து அறிந்திருந்தார்; அவர் இயேசுவை குற்றமற்றவர் என்றும் அறிந்திருந்தார், ஆனால் அவரை விடுதலை செய்ய தைரியம் இல்லை. யூதேயாவிலும் யூதர்கள் இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலெல்லாம் சட்ட நீதிமன்றங்கள் மாதிரியாக இருந்தன. "யூதர்கள் சென்ற இடங்களிலெல்லாம் தங்களுடைய சொந்த நியாயப்பிரமாணத்தை எடுத்துச் சென்று நீதிமன்ற வழக்குகளை தங்கள் சமுதாயத்திற்கான அதனுடைய வழிகாட்டுதலின்படி நடத்தினர்."[5]

நவீன மேற்கத்திய கலாச்சாரத்தில் சட்ட நீதி மன்றங்களுடன் அனுபவம் வாய்ந்தவர்கள் வேடிக்கையாக நினைப்பது என்னவெனில், யூத அல்லது கிறிஸ்தவ நீதிமன்றங்களின் பகுதியொத்த சட்ட அதிகாரங்களை ரோம நீதிமன்றங்கள் பொறுத்துக் கொள்வது விசித்திரமானது. ரோமர்களின் நிலைப் பாட்டிலிருந்து, நீதி முறைமை என்பது குடிமக்களுக்கு குறைந்த செலவில் வழங்கப்பட வேண்டிய ஒரு சேவையாக கருதப்பட்டது. பொது அதிகாரிகள் தங்கள் சமுதாய மக்களே காவல் பணியிலும் நீதித்துறையை நிர்வகிப்பதிலும் பிரியமாயிருந்தனர். எருசலேமில் உள்ள பிரதான ஆசாரியர்கள் தமஸ்குவில் உள்ள ஜெப ஆலயங்களில் கட்டளைகளை கடைப்பிடிக்கும்படி செய்தனர் (அப். 9:1, 2). எமில் சூரேர் பின் வருமாறு எழுதினார், "யூதர்கள் உண்மையில் சிவில் வழக்குகள் மட்டுமல்லாமல், குற்றவியல் வழக்குகளையும் தங்கள் சொந்த அங்கத்தினர்கள் சந்தித்ததை பார்க்க முடிந்தது."[6] பவுலைப் பொறுத்தவரை, யூதர்களுடைய நியாய நீதிமன்றங்கள் மதச்சார்பற்ற நீதி மன்றங்களை விட கிறிஸ்தவர்களுக்கு அதிக ஒரே மாதிரியான நியாயத்தை வழங்கும் மாதிரியை அளிக்கின்றன.

**வசனம் 2.** மதச்சார்பற்ற நீதிமன்றங்களுக்கு செல்லாமல் கிறிஸ்தவர்கள் தங்கள் சண்டைகளை தங்களுக்குள்ளே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று பவுல் கூறும்போது, அதற்கு அவர் கொடுத்த ஆதரவு வாதம் தெளிவாக இல்லை. **பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?** என்று அவர் கேட்டார். இரண்டு கூர்நோக்குகள் உதவியாக இருக்கும். முதலாவதாக, தானியேல் 7:22: "... நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு." என்ற வசனத்தை அப்போஸ்தலர் முறையிடுவதாக தோன்றுகிறது.

இந்த வேதபகுதி LXX வேதாகமத்தில் வழங்கப்பட்டபடி, καὶ τὴν κρίσιν ἔδωκε τοῖς ἁγίοις τοῦ ὑψίστου (*kai tēn krisin edōke tois hagiois tou hupsistou*), "... உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்கு அவர் நியாயத்தீர்ப்பைக் கொடுத்தார்," கடைசிகால நியாயத்தீர்ப்பில் தேவன் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை நியமிப்பார் என்று பரவலாக புரிந்துகொள்ளப்பட்டது. கொர்டன் டி. ஃபி என்பவரின் இந்த வேதபகுதியை குறித்த புரிந்துகொள்ளுதல் என்னவெனில் "பல்வேறு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டது, கும்ரான் நூலும் உள்ளடக்கப்பட்டது."[7] கடைசி கால நியாயத்தீர்ப்பில் தேவன் பரிசுத்தவான்களை எவ்விதம் ஈடுபடுத்துவார் என்கிற விஷயம் இங்கு ஒரு பிரச்சினை அல்ல. அவர்கள் உலகத்தை நியாயந் தீர்ப்பதில் பங்கேற்பார்கள் என்ற உண்மை வெறுமனே சொல்லப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, பவுலின் வாதம் பெரியதிலிருந்து சிறியதை நோக்கி தரப்பட்டுள்ளது; அதாவது, உலகத்தை நியாயந்தீர்க்கும் போது தேவன் கிறிஸ்தவர்களை நோக்கிப்பார்த்தால், நிச்சயமாக அவர்களால் சிறிய விஷயங்களுக்கு தீர்ப்பு வழங்க முடியும். தற்காலத்தில் "புறமத மக்களை நியாயந்தீர்க்கும்" பொறுப்பு கிறிஸ்தவர்களுக்கு இல்லை; அவர்கள் "சபைக்கு உள்ளே இருக்கிறவர்களையே நியாயந்தீர்ப்பார்கள்" (5:12). கர்த்தர் திரும்ப வருகிற பொழுது மற்றும் மாம்சமான யாவரும் தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்பில் நிற்கிற பொழுது (2 கொரி. 5:10), நோவாவின் நீதி ஜலப்பிரளயத்திற்கு முந்தைய உலகத்தை குறிப்பிட்டது போல கிறிஸ்தவர்களின் தேவபக்தியுடைய நீதியான வாழ்க்கை அவர்களை நியாயந்தீர்க்கும் (எபி. 11:7).

பவுல் மேற்கொண்டு கேட்டார், **உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?** இந்த கேள்வி நியாயப்படுத்துவது என்னவெனில், பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்க்கும் பணியில் ஈடுபடுவார்கள் என்பதால், அவர்கள் சிறிய விஷயங்களில் முடிவுகளை எடுக்க தகுதியுள்ளவர்கள். கொரிந்தியர்கள் தங்கள் மோதல்களை கிறிஸ்தவ சமுதாயத்திற்குள்ளேயே தீர்க்க வேண்டும். அத்தகைய வேறு பாடுகளின் தீர்மானம் அதிக பட்சமாக நியாய மானதாக இருக்கும்.

**வசனம் 3.** மனித இனத்தின் மேலான தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பில் விசுவாசிகளின் தேவபக்தியுள்ள வாழ்க்கை போதுமான அமைதியான தாக்கத்தை ஏற்படுத்தும், ஆனால் பரிசுத்தவான்களுக்கான நியாயாதிபதியின் உயர்ந்த மரியாதை இன்னும் அதிகமாகிறது என்று பவுல் சுட்டிக்காட்டினார். தன்மை இடத்திற்கு (first person) மாறி, அப்போஸ்தலன் கேட்டார், **தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா?** 2 பேதுரு 2:4 மற்றும் யூதா 6 ஆகிய இரண்டு வசனங்களும் பாவஞ்செய்த

தூதர்களை குறித்துப் பேசுகிறது. சில தேவ தூதர்களும் பாவம் செய்திருக்கிறார்கள், அவர்களும் மக்களைப் போலவே தங்கள் மீறுதல்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என்ற உண்மையைத் தவிர வேதாகமத்தில் வேறு தகவல்கள் தரப்பட வில்லை. விசுவாசிகளால் நியாயந்தீர்க்கப்படும் தேவதூதர்களைப் பற்றி குறிப்பிடுகையில், பவுல், பேதுரு, மற்றும் யூதா ஆகியோர்கள் சாத்தானைப்பற்றி குறிப்பிடவில்லை.

"உலகத்தை" அல்லது "தேவதூதர்களை" நியாயந்தீர்ப்பதில் கிறிஸ்தவர்களுக்கு உள்ள பங்கு துல்லியமாக குறிப்பிடப்படவில்லை. மனித நியாயாதிபதிகளின் நியாயத் தீர்ப்புகள் தேவனுடைய தீர்ப்புகளிலிருந்து வேறுபடுமாயின், தேவன் தன்னுடைய தீர்ப்பை ஒத்திவைப்பார் என்று பவுல் நிச்சயமாக சொல்லவில்லை. மேலும் நியாயமாக, கிறிஸ்தவர்களின் விசுவாசமான வாழ்வு தேவ தூதர்களின் பாவத்தின் மீது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுகிறது போல அவர்களுடைய நல்ல மாதிரியான வாழ்வும் தேவபக்தியற்ற உலகத்தை நியாயந்தீர்க்கும் (காண்க மத். 19:28; எபி. 11:7). தேவதூதர்களைப் பற்றிய அப்போஸ்தலரின் குறிப்பு 6:2ல் உள்ள கேள்விகளை மீண்டும் வலியுறுத்துகிறது. தங்களில் ஒருவன் இந்த **ஜீவனுக்கேற்ற** வழக்கை உடையவனாயிருக்கும் போது கொரிந்திய கிறிஸ்தவர்கள் நியாயத்தீர்ப்பில் உட்கார்ந்திருக்க தகுதி பெற்றிருந்தனர்.

## வழக்காடுதல் அவிசுவாசிகளுக்கானது (6:4-8)

**4இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச்செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக் கொள்ளுங்கள். 5உங்களுக்கு வெட்கம் உண்டாகும் படி இதைச் சொல்லுகிறேன். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? 6சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் அப்படிச் செய்கிறான். 7நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை? 8நீங்களே அநியாயஞ் செய்கிறீர்கள், நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே.**

**வசனம் 4.** பவுலின் பேச்சுத் திறன்வாய்ந்த கேள்விகள், மதச்சார்பற்ற நீதிமன்றங்கள் முன் உலகப் பிரச்சினைகளை நியாயத்திற்காக எடுத்துச் செல்லும் பரிசுத்தவான்களின் அறிவின் மையை வலியுறுத்துகின்றன. **இந்த ஜீவனுக்கேற்றவைகள்** (βιωτικά, *biōtika*) என்பது ஒருவரின் குடும்பத்திற்கு அல்லது உறவினர்களுக்குத்

தேவையானவைகளை கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஒரு சொத்து வரி, சந்தையில் ஒதுக்கப்பட்ட ஒரு கடை, ஒரு கடன் தீர்வு, அல்லது உடன்பட்ட-ஊதியங்கள் போன்றவைகள் அமைதியான மக்களை வழக்குகளில் சிக்க வைத்திருக்கலாம். அத்தகைய வழக்குகள் கோபமாகவும் கசப்பாகவும் மாறியிருக்கலாம். தங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை தீர்க்க விசுவாசிகள் லஞ்சம் மற்றும் முகஸ்துதிக்கு உட்பட்டிருந்த உலக நீதிமன்றங்களுக்குச் சென்ற போது சபையின் ஐக்கியம் மற்றும் ஒற்றுமை குறைவாக மதிப்பிடப்பட்டது.

விசுவாசிகளிடையே எழுந்திருக்கும் பிரச்சினைகளை பவுல் குறைவாக கருதவில்லை, அல்லது அத்தகைய பிரச்சனைகளுக்கு சரி மற்றும் தவறு என்று எப்போதும் தீர்க்கமான தீர்ப்பளிக்கப்படலாம் என்றும் அவர் கருத்து சொல்லவில்லை. உலக நீதிபதிகளைக் காட்டிலும் அனைத்துத் தரப்பினர்களும் ஏற்கத்தக்க நியாயமான முடிவுகளை வழங்குவதற்கு தகுதிபடைத்த மரியாதைக்குரியவர்கள் சபையில் அதிகமாக இருந்தனர் என்று அவர் சொன்னார். NIV 1984 மொழிபெயர்ப்பு 4 ஆம் வசனத்தை பேச்சுத்திறமையுடைய கேள்வியாக தரவில்லை. καθίζετε (*kathizete*, "ஏற்படுத்து") என்ற கிரேக்க வார்த்தையை கட்டளையாகப் பொருள் கொண்டதால், இந்த மொழிபெயர்ப்பை தருகிறது: "ஆகையால், இத்தகைய விஷயங்களைப் பற்றிய விவாதம் உங்களுக்கு உண்டானால், சபையின் அற்பமான மனிதர்களை நீதிபதியாக நியமிக்கவும்." கிறிஸ்தவர்கள் தங்களுக்கிடையே உள்ள வழக்குகளை தீர்க்க மதச்சார்பற்ற நீதிமன்றத்திற்குச் செல்வதைக்காட்டிலும் குறைந்த பட்சம் தகுதி வாய்ந்த உறுப்பினர்களையே நீதிபதியாக நியமிப்பதே சபைக்கு சிறந்ததாக இருக்கும். அவிசுவாசிகளைக் காட்டிலும் சபையில் குறைந்த பட்ச தகுதி உடையவர்களே அன்றாட வாழ்க்கையின் விஷயங்களைப் பற்றி சச்சரவுகளை மிகத் திறமையாக சமாளிக்க முடியும். NIV 1984 அல்லது NASB மொழிபெயர்ப்புகளில் எது சிறந்தது என்று தீர்மானிப்பது மிகவும் கடினமானது. இரண்டு மொழி பெயர்ப்புகளும் சூழ்நிலைக்கு நன்றாக பொருந்துகிறது, ஆனால் சபையில் உள்ள தனிப்பட்ட பிரச்சினைகளை தங்களுக்குள்ளே தீர்க்கவேண்டும் என்ற பவுலின் அறிவுறுத்தலுக்கு பொருந்தி வாசகர்களின் எதிர்பார்ப்பை நிவிர்த்தி செய்யும் மொழி பெயர்ப்பு NIV 1984 ஆகும்.

**வசனம் 5.** சகோதரர்களுக்குள்ளே பிரச்சனைகள் எழுந்தபோது ஞானமான நியாயத்தீர்ப்புகளை வழங்க முடியாததைப்போல கொரிந்தியர்கள் நடித்ததை முரணாகக் கண்டார் அப்போஸ்தலர். அவர்களுடைய பிரிவினை சுரண்டல்களில், அவர்கள் தங்களுடைய சொந்த ஞானத்தைக் குறித்த உயர்ந்த கருத்தை செயல்படுத்திக் காட்டினார்கள் (காண்க 3:18-20). இந்த சுய மதிப்பீட்டு ஞானத்தினால்

ஆனது என்ன? தத்துவவாதங்களில் தாராளமாக காணப்பட்டது ஆனால் பிரச்சினைகள் தீர்க்கும் நடைமுறை விஷயத்தில் மிகவும் குறைவாக இருந்தது ஏன்? சபை வாழ்க்கையையில் ஞானம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் எதிர்பார்த்தார்.

சர்ச்சைகள் எழும்போது அவர்கள் கொடுக்கும் நல்ல நியாயத்தீர்ப்பே சிறந்த ஆவிக்குரிய வரமாக பவுல் விசுவாசிகளில் கண்டார். 12:28-ன் படி சிலர் “ஆளுகைகள்” வரத்தை வெளிப் படையாக பெற்றிருந்தனர் (κυβέρνησις, *kubernēsis*), இந்த வார்த்தை வழிநடத்தும் திறமையை சுட்டிக்காட்டுகிறது, கப்பல் மாலுமி ஒரு கப்பலை பாதுகாப்பான பாதையில் நடத்துவது போல. கொரிந்து சபையில் இத்தகைய வரத்தை பெற்றவர்கள் கடினமான நேரங்களில் சபையை வழிநடத்த எழும்ப வேண்டும். இவ்வரம் பெற்ற ஒருவர் அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தால், அவருடைய விசுவாசம் கேள்விக்குள்ளாகிறது.

**வசனம் 6.** ஒரு சகோதரர் மற்றொரு சகோதரருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த சூழ்நிலைகளை குறித்த பவுலின் அணுகு முறை முழுவதிலும், அவன் அவநம்பிக்கையோடு எதிர்த்தான். பிரச்சனை இரண்டு விதமானது: ஞானமுள்ள விசுவாசிகள் தங்களை பயந்தவர்களாக காட்டினர், மற்றும் உலக எண்ணம் கொண்ட கிறிஸ்தவர்கள் மோதல்களைத் தீர்க்க சமரசம் செய்ய விரும்பவில்லை. இதன் விளைவு சபையில் மாய் மாலம் மட்டும் அல்ல, ஆனால் பொது அவமானமும் கூட: **சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான்.** தங்கள் வழக்கை **அவிசுவாசிகளுக்கு** முன்பாக வழங்குவதன் மூலமாக, அத்தகைய விஷயங்களுக்கு தீர்ப்பு வழங்குவதற்கு தங்களில் ஞானமுள்ளவர் அல்லது நம்பத்தகுந்தவர் யாரும் இல்லை என்று கிறிஸ்தவர்கள் பகிரங்கமாக அறிவித்தார்கள். கிறிஸ்துவை அறிந்துகொள்ளும் முன்னர் இருந்ததைப் போல அதே தத்தளிக்கிற, சுயநலமுள்ள மக்களாக தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். அவர்களிடமிருந்து நல்ல நடத்தைகளை கர்த்தர் எதிர்பார்த்தார், பவுல் எதிர்பார்த்தது போல.

**வசனம் 7.** சகோதரர் ஒருவரையொருவர் எதிர்த்து வழக்காட புறஜாதி அதிகாரிகள் முன்பு செல்வதால் விசுவாசிகளிடையே உள்ள பரஸ்பர உறவுகளை சித்தரிக்கும் தாராள மனப்பான்மை மற்றும் மன்னிப்பு போன்றவைகள் அவமதிப்பிற்குள்ளாகிறது. வழிகாட்டுதலுக்காக ஞானிகளிடம் சென்று சபை தங்களது சொந்த மோதல்களை தீர்த்துக்கொள்ள மறுத்தது மட்டுமல்லாமல், தங்களுக்குள் காணப்பட்ட போட்டி மனப்பான்மையையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். தங்களுக்கு இலாபத்திற்கான ஒரு வாய்ப்பாக இருக்கும் வரை ஒரு சிறிய விஷயமாக இருந்தாலும் யாரும் அதை விட்டுவிட தயாராக இல்லை.

சகோதரன் சகோதரனோடே வழக்காடும்போது இது ஏற்கனவே ஒரு தோல்வியாயிருக்கிறது, என்று பவுல் சொன்னார், அவர்கள் பின்பற்றுவதற்கென்று இயேசு ஒரு நல்ல முன்மாதிரியை வைத்தார். அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே (2 கொரி. 8:9). கிறிஸ்துவின் சீஷரின் வஸ்திரத்திற்காக வழக்காடுகிற சத்துருவுக்கு, தன்னுடைய அங்கியையும் கொடுக்கவேண்டும் என்று இயேசு தன்னுடைய சீஷருக்கு கட்டளை கொடுத்தார் (மத். 5:40). மேலும் அவர் சொன்னார், "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே" (மத். 5:42). விசுவாசிக்கு எதிராக விசுவாசி வழக்காடும்போது, இரண்டு தரப்பினரும் வெற்றிபெற முடியாது.

சக விசுவாசி ஒருவர் தனக்கு அநீதி செய்ததாக ஒரு கிறிஸ்தவர் நம்பும்போது, அவர் விரும்பினால் அந்த விஷயத்தை தள்ளுபடி செய்து அக்குற்றத்தை மன்னிக்கலாம். ஒரு சகோதரர் ஒருவர் வழக்கமான சம்பளத்தைக் காட்டிலும் அதிக சம்பளத்தை வலி யுறுத்தினால், அவருக்கு ஒரு கூடுதலான தொகையை செலுத்துவதே மிகச் சிறந்த கிறிஸ்தவ தன்மை ஆகும். குறிக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் சில அடிகள் தன்னுடைய சொத்து இருக்கிறது என்று ஒருவர் கூறினால், அந்த நிலத்தை முழுவதையும் அவருக்கு கொடுக்கும்படி இயேசு கூறுவார். நமக்கு கொடுக்கப்பட வேண்டிய கடுமையான நீதியை வலியுறுத்துவதற்கு பதிலாக, பவுல் கேட்டார், **நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை?**

இந்த தாராளமயத்திற்கு வரம்புகள் என்ன? பொறுமையையும் தொண்டுள்ளத்தையும் பேராசை மேற்கொள்ளும்போது ஒருவர் செய்யவேண்டியது என்ன? நல்லெண்ணமும் நல்ல விசுவாசமும் செய்து கொள்ளும் ஒப்பந்தம் தோல்வியுற்றால், சபையிலுள்ள ஞானிகள் தலையிட முன்வர வேண்டும். அநீதிகள் என்று அறியப்பட்டவைகள் விசுவாசிகளின் சமுதாயத்திற்குள்ளே தீர்க்கப்பட வேண்டும். பழங்கால கிறிஸ்தவர்களுக்கு இம்முறை பரிந்துரைக்கப்பட்டதுபோல தற்கால சபைக்கும் அது பொருந்தும்.

**வசனம் 8.** கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்கள், நியாயப் பிரகாரமாக நடந்துகொண்டிருந்ததைவிட தங்களைச் செல்வந்தர் களாக மாற்றுவதற்காக உள்ளூர் சட்டத்தின் நுணுக்கங்களைப் பயன் படுத்துவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதே பவுலின் கோபத்தை எழுப்பியது. விசுவாசிகளின் மத்தியில் சமாதானமும் நல்லெண்ணமும் ஏற்பட அநீதியை ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக, பவுல் குற்றப்படுத்தினார், **நீங்களே அநியாயஞ்செய்கிறீர்கள், நஷ்டப்**

**படுத்துகிறீர்கள்.** பாதிக்கப்பட்ட அவிசுவாசிகளுக்கு அநீதி விளைவிக்கும் அளவிற்கு தங்கள் சொந்த நலன்களையே விசுவாசிகள் மையப்படுத்தியது மிகவும் தவறான ஒரு செயல், ஆனால் கொரிந்துவில் உள்ள சிலர் தங்கள் விசுவாசத்தை பகிர்ந்து கொண்டவர்களை பாதிப்பிற்குள்ளாக்கிக் கொண்டிருந்தனர்.

குற்றவாளிகளின் கண்களைப்பார்த்துப் பவுல் சொன்ன அவருடைய குரலை கேட்பது ஆர்வமாக இருக்கும், **சகோதரருக்கும் அப்படிச் செய்கிறீர்களே.** விசுவாசிகளிடையே ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தின் தனித்துவமான உறவு இருக்கிறது (கலா. 6:10). கிறிஸ்தவர் ஒருவர் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கிற மற்றொருவருக்கு எதிராக ஒரு அநியாயத்தைச் செய்தால், அது சபையாகிய முழு சரீரத்தையும் பாதிப்பதினால் அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பாவத்தையும் அநீதியையும் எதிர் கொள்ளுதல் சில சமயங்களில் அமைதியான மன நிலையைக் காட்டிலும், கட்டுப்பாடான சூழலுக்கு அழைப்பு விடுகிறது என்பதை பவுல் நிரூபித்தார். கொரிந்தியரின் இந்தவிதமான நடத்தை விஷயத்தில் அப்போஸ்தலருக்கு எந்தப் பங்கும் இல்லை. இந்த பதிலை கிறிஸ்துவின் சரீரத்திற்கு முரணாகக் கண்டார்.

## ராஜ்யம் நீதிமான்களுக்கு உரியது (6:9-11)

**9அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப் பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், 10திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை. 11உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசு வின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப் பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.**

**வசனம் 9.** சகோதர அன்பையும் ஒற்றுமையையும் இழந்து, சகோதரர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டதற்காகவும், தனிப்பட்ட ஆதாயத்திற்காக ஒருவரையொருவர் ஏமாற்றியதற் காகவும் கண்டிக்கப்பட்டார்கள். அவருடைய கரிசனையை சிறிய விஷயமென்று ஒருவரும் எண்ணி விடக்கூடாதென்று, இவ்வகை யான செயல்களை சந்தேகத்திற்கு இடமின்றி பாவமென்று கருதப்பட்ட செயல்களோடு ஒன்றாக இணைக்கிறார். **வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்** “தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று” அவர் உறுதியாகக் கூறினார் (6:10).

மற்றவர்களை வஞ்சிக்க எண்ணுகிறவர்களையும் சமாதானத்தின் நிமித்தம் வஞ்சிக்கப்பட விருப்பமில்லாதவர் களையும் அநீதியானவர்கள் என்று அவர்களோடு சேர்த்தார்.

பவுல் ஒரு சொற்திறன் படைத்த கேள்வியை கேட்கிறார். அவர் அர்த்தம் கொண்டதாவது, "நிச்சயமாக, துன்மார்க்கர்கள், முழுமையான வாடிக்கையான ஒழுக்கக்கேடானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களும், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. புறஜாதி நீதிமன்றங்களில் அநியாயத்தைச் செய்பவர்களும் எந்த வகையிலும் வேறுபட்டவர்கள் அல்ல."

**தேவனுடைய ராஜ்யம்** என்றால் என்ன? இயேசுவின் போதனையில் இச்சொற்றொடர் மூலைக்கல்லாக இருந்தது மற்றும் நற்செய்தி நூல்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது, யோவானில் அரிதாக சொல்லப்பட்டுள்ளது (காண்க யோவான் 3:3, 5). "தேவனுடைய ராஜ்ஜியம்" என்ற சொற்றொடர் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் ஆறு முறைகள் சொல்லப்பட்டுள்ளது. பவுல் எப்போதாவது இச்சொற்றொடரைப் பயன்படுத்தினார், மற்ற நூல்களைவிட 1 கொரிந்தியரில் அதிகமாக சொல்லப்பட்டுள்ளது (4:20; 6:9, 10; 15:50).

ஒரு வகையில், தேவனுடைய ராஜ்யம் இனிமேல் தான் வரப்போகிறது. விசுவாசிகளால் இனிமேல்தான் சுதந்தரித்துக் கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய ராஜ்ஜியம் கடைசிக் காலத்தில் முழுமையாக நிறை வேற்றப்படும். மற்றொரு வகையில், தேவனுடைய ராஜ்ஜியம் ஏற்கனவே நிறுவப்பட்டது. தேவமக்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தேவனுடைய ராஜ்ஜியம் இருக்கிறது (காண்க 4:20; கொலோ. 1:13). இராஜ்ஜியத்தின் பங்குள்ளவர்களாக இருப்பவர்கள் தூங்கக்கூடாது என்று பவுல் எச்சரிக்கிறார். கிறிஸ்தவர்கள் எப்போதும் விழித்திருக்க வேண்டும்; பாவத்திற்கும் நித்திய ஜீவனுக்கும் இணக்கத்தன்மை இல்லை, இக்காலத்திலோ அல்லது வருங் காலத்திலோ. சிலர் பாவத்தை லேசானதாக கையாள புத்தி சாலித்தனமான வாதங்கள் அவர்களை வஞ்சிக்கும், ஆனால் நித்திய இரட்சிப்பு ஆபத்தான கட்டத்தில் உள்ளது என்று பவுல் தன்னுடைய வாசகர்களுக்கு உறுதியளித்தார். அவர் பட்டியலிட்ட நடத்தைகள் அவைகளைப் பின்பற்றுவோர் அனைவரையும் தேவனுடைய ராஜ்ஜியத்திலிருந்து விலக்கி விடுகிறது.

9 வது வசனத்தில் சொல்லப்பட்ட ஐந்து பாவங்களில் நான்கு பாலியல் தன்மையை உடையது. வேசித்தனமும் விபச்சாரமும் பாலுறவு பாவங்கள்; கடைசி இரண்டும் ஓரினச்சேர்க்கை பாவங்கள். புதியஏற்பாட்டில், "வேசித்தனம்" என்பது திருமணத் திற்கு வெளியே உள்ள பாலுறவுத் தொடர்பை குறிக்கும் ஒரு பொதுவான வார்த்தை. திருமணம் ஆன ஒரு ஆணுக்கும் திருமணம் ஆன ஒரு பெண்ணுக்கும்

இடையிலான பாலுறுவுத் தொடர்பை குறிப்பது விபச்சாரம், ஆனால் இவர்கள் கணவனும் மனைவியும் அல்ல. இத்தகைய பாவங்களில் பல கொரிந்துவில் நடைமுறையில் காணப்பட்டது, மதத்தின் பெயரிலும். யூதர்கள் புறமத மக்களின் ஒழுக்கக்கேட்டை அப்படியே வெறுத்தார்கள்.

μαλακός (*malakos*, “ஆண்மை அற்ற”) என்ற வார்த்தை, ஒரு பொதுவான அர்த்தத்தில், மென்மையான உடைகளை அல்லது தொடுவதற்கு வழி வகுக்கும் மற்ற பொருட்களை குறிக்கிறது. கூட் டாளிகளாக இருக்கும் இளைஞர்களையும் சிறுவர்களையும் குறிப்பிட இந்த வார்த்தை பயன் படுத்தப்பட்டது - விருப்பத்துடன் அல்லது விருப்பமில்லாமல், சம்பளத்திற்காக அல்லது உடன் பாட்டினால் - ஓரினச் சேர்க்கை உறவில்.[8] NIV மொழி பெயர்ப்பு, “ஆண்களுடன் உடலுறவு வைத்துக் கொள்ளும் ஆண்களை,” என்பது அந்த வார்த்தையை குறுகிய கோணத்தில் கட்டுப் படுத்துகிறது. மேலும் ஓரினச்சேர்க்கை பழக்கம் உடைய ஆண் ஒருவர் பின்பற்றும் வெவ்வேறு உறவு வழிகளை குறிக்க இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

பவுல் பயன்படுத்திய இரண்டாவது வார்த்தை, “ஆண் புணர்ச்சிக்காரர்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (ἀρσενοκοίτης, *arsenokoitēs* மூல வார்த்தை ἄρσην, *arsēn*, “ஆண்கள்” மற்றும் κοίτη, *koitē*, “பாலியல் ஒழுக்கமின்மை”). அநேகமாக LXX வேதாகமத்தின் லேவியராகமம் 18:23; 20:13யிலிருக்கும் சொற் பிரயோகத்தை பவுல் பின்பற்றியிருக்கலாம். இரண்டு வார்த்தை களைக் குறித்த முறையான வேத ஆராய்ச்சிக்குப் பிறகு பின்வரும் முடிவை எட்டினார் David E. Malick என்பவர்:

> அந்த வார்த்தைகள் ஓரினச்சேர்க்கை உறவில் ஈடுபடுகிற செய்கிற மற்றும் செய்யப்படுகிற இரு தரப்பினரையும் சித்தரிக்கின்றன. இயற்கைக்கு மாறான உடலுறவையும் குறிப்பிடுகிறது (ஒரு ஆணுக்கும் ஒரு சிறுவனுக்கும் இடையிலான உறவு) ஆனால் பரஸ்பர பரந்த நடவடிக்கைகளையும் குறிக்கக் கூடும், எபிரெய வேதாகமத்தின் கலாச்சார கண்ணோட்டத்தில் உள்ள ஒரே பாலின உறவு, குறிப்பாக லேவியராகமம் 18:22 மற்றும் 20:13.[9]

ஓரினச்சேர்க்கைக்கான தற்கால வக்காலத்துவாதிகள் பவுலின் வார்த்தைகளை மறுக்கவோ அல்லது மறுபரிசீலனை செய்யவோ முயற்சி செய்யலாம், ஓரினச்சேர்க்கையை கடைப்பிடித்தல் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாத பழக்கம் என்று அப்போஸ்தலர் நம்பினார்.

ஒருவேளை சிலர் ஓரினச்சேர்க்கையைச் சார்ந்து பிறந்திருந்தாலும், ஓரினச்சேர்க்கையை நடை முறைப்படுத்துவதை கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் ஏற்றுக் கொள்ள முடியாது. சுயநலம், திருடுதல்,

தீமையான பழக்கங்களுக்கு அடிமையாகுதல், பிறருக்கு தீங்கு விளைவித்தல் போன்ற மனப்பாங்கோடு பிறக்கும் மக்களும் உண்டு. “இயற்கையான” மனித மனோபாவங்களைக் கட்டுப் படுத்துவது பற்றி கிறிஸ்தவ நெறி முறைகளில் பெரும்பாலானவை உள்ளன. Stanley J. Grenz நன்றாக சொன்னார்:

> [நெறிமுறைகள்] என்பது இயல்பானவைகளை வெறுமனே கண்டுகொள்ளாமல் விட்டுவிடுதல் அல்ல ... ஆண்களை இயல்பிலேயே ஒழுங்கற்றவர்கள் என்று சில ஆய்வாளர்கள் முடிவெடுத்தாலும், இது இயற்கையான குணம் என்று வேதாகமம் தரும் கற்பைக்குறித்த நெறியை ஒதுக்கி வைக்க முடியாது.[10]

இதுபோலவே, ஒருவர் ஓரினச்சேர்க்கை சுபாவத்தோடு பிறந்திருந்தாலும் அந்த பழக்கத்தை நியாயப்படுத்த முடியாது.

நான்கு பாலிலியல் பாவங்களோடு விக்கிரகாராதனை பாவத்தை பவுல் கொண்டுவந்தது எதிர்பாராதது. பெரும்பாலும் ஒழுக்கக்கேடான சடங்குகள் புறமத மத விழாக்களுடன் தொடர்புடையதால் அவர் அவ்வாறு செய்திருக்கலாம். பழைய ஏற்பாட்டில், பரிசுத்த விபச்சாரம் என்பது பாகால் மற்றும் அவரது மனைவியுடன் தொடர்புடைய வழிபாட்டு முறையின் ஆழ்ந்த அம்சமாகும். இந்த நடைமுறை குறிப்பாக அருவருப்பு அற்றது எனில் மரியாதைக்குரிய யூத ஆண்கள் மற்றும் பெண்கள் அதற்குள் இழுக்கப்பட்டிருப்பார்கள். “சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் செய்ததைக் கண்டாயா?” என்று எரேமியா கேட்டார். “அவள் உயரமான சகல மலையின்மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும் போய், அங்கே வேசித்தனம் பண்ணினாள்” (எரே. 3:6). தீர்க்கதரிசி அடையாளப்பூர்வமாக பேசவில்லை. கிரேக்கர்கள் இதே போல் தியோனிஸஸ் மற்றும் பிற தெய்வங்களுக்கும் சிற்றின்ப ஆடல் பாடற் களியாட்டஞ் சார்ந்த சடங்குகளை அர்ப்பணித்தனர்.

**வசனம் 10.** அவ்வப்போது நல்லொழுக்கங்களை பட்டிய லிட்டிருந்தாலும், அப்போஸ்தலர் பொதுவாக பாவங்களைப் பட்டியலிடுவதை கையிலெடுத்தார் (காண்க கலா. 5:19-23). பாலியல் பாவங்களிலிருந்து தங்களையும் பிறரையும் கெடுக்கும் பிற பாவங்களை சுட்டிக்காட்டும்படி அவர் செல்கிறார். **பொரு ளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும்** ஏற்கனவே ஒரு பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள் (1 கொரி. 5:11). பொருளாசையின் விளைவினால் திருட்டுக்குணம் ஏற் படுவது போல, தேவனுடைய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விசுவாசத்திலிருந்துதான் கிறிஸ்தவ வாழ்க்கை முறைகள் வளர்கிறது. பவுலின் பார்வையில், விசுவாச அறிக்கையை வாழ்க்கை முறையிலிருந்து பிரிக்க முடியாது. கிறிஸ்தவ விசு வாசத்தை நடை முறைப்படுத்த தவறினால் **தேவனுடைய ராஜ்ஜியத்தை** இழந்து விடுவோம்.

**வசனம் 11.** பவுல், இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாக, மீட்பின் கருப்பொருளை கொண்டுவராமல் பாவத்தின் கொடூரத்தை தன்னுடைய வாசகர்களுக்கு முன் வைக்கமாட்டார். இயேசுவின் நாமத்தினாலே சுத்திகரிக்கப்பட்டு அவர்கள் இரட்சிப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று அவர் தன்னுடைய வாசகர்களை நினைப்பூட்டினார். சகோதரருக்கு விரோதமாக சகோதரர் நீதிமன்ற வழக்குகளுக்கு சென்றதினால் பவுல் வெறுப்படைந்திருந்த போதிலும், கிறிஸ்துவுக்குள்ளே இருப்பது அவர்களுக்கு ஏதாவது ஒரு நல்ல வழியைத் திறக்கும் என்று தன்னுடைய வாசகர்களுக்கு நினைப்பூட்டினார். கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களின் நடத்தை பேராசையின் ஒரு செயல் திட்டத்தை பிரதிபலித்தது, ஆனால் அப்போஸ்தலன் அவர்களுடைய நல்ல உள்ளுணர்வுகளுக்கு திரும்பும் படி முறையிட்டார். நித்திய ஜீவனுக்கு போகும் வழியில் இருப்பதற்குக் கூடவே, இவ்வுலக வாழ்வில் சுயமரியாதையில் திருப்தியளிக்கிற ஒரு வாழ்க்கைக்கு தேவன் அவர்களை அழைத்திருக்கிறார். பவுல் உணர்ந்தது என்னவெனில் “அவர்கள் பாவத்தில் தொடர்ந்து நீடித்திருந்தாலும், பாவ இச்சைகளை எதிர்த்து நிற்க போதுமான வல்லமையை கிறிஸ்தவர்களுக்குத் தேவன் கொடுக்க முடியும் ... பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து விசுவாசிகளை கிறிஸ்து விடுவிப்பதினால் அவர்கள் தங்கள் நட வடிக்கைகளை தெரிவுசெய்வதன் அவசியத்தைப் பற்றி தெரிந்து கொள்கிறார்கள்.”[11]

மிகவும் மோசமான பாவிகளான ஆண்களையும் பெண்களையும் சுவிசேஷத்தின் மாற்றும் வல்லமையினால் பரிசுத்தர்களாகவும் தேவபிள்ளைகளாகவும் மாற்ற முடியும். மனுக்குலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவருவதற்கு தேவன் எடுத்த முன் முயற்சிக்கும், இரட்சிக்கப்பட்டவர்கள் மகிமைப்படும்படி தழுவிக் கொள்ள வேண்டிய பொறுப்புக்கும் இடையே ஒரு சமநிலையை பராமரித்தார் அப்போஸ்தலர். ஒவ்வொரு விசுவாசியின் எளிய பக்தியிலும் தேவ நம்பிக்கையிலும் சபையின் வலிமை அடங்கி இருக்கிறது.

பவுல் தேவனிடம் கொண்ட இந்த நம்பிக்கையை வெளிப்படுத்திய சில வருடங்களுக்குப் பிறகு, ரோம சபையிலுள்ள ஒரு மூப்பர் தேவனுடைய இரக்கமுள்ள கரிசனையின் மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையை குறித்து எழுதினார். முதல் நூற் றாண்டின் கடைசி தசாப்தத்தில், அவர் கொரிந்து சபைக்கு எழுதிய கடிதத்தில் பின்வரும் ஜெபத்தை அவர் நினைவுகூர்ந்தார்:

> எங்களுக்குத் தாரும், கர்த்தாவே, அனைத்து படைப்புகளின் மூல ஆதாரமான உமது நாமத்தின் மேல் எங்கள் நம்பிக்கையை வைக்கும்படி, எங்கள் இருதயத்தின் கண்களை திறந்தருளும், நாங்கள் உம்மை அறிந்துகொள்ள, உன்னதங்களுக்கு மேலாக உயர்ந்தவர், பரிசுத்தத்தில் பரிசுத்தமானவர்; பெருமைக்காரரின் மேட்டிமையான

எண்ணங்களை தாழ்த்துகிறவர்: ஜாதிகளின் கற்பனைகளை சிதறடிக்கிறவரே; எளியவனை உன்னதத்தில் உட்காரச் செய்கிறவரே, பலவான்களை தாழ்த்துகிறவரே; ஐசுவரியவான்களை தரித்திரராக்கி தரித்திரர்களை ஐசுவரியவான் களாக்குகிறவரே; கொல்லுகிறவரும் வாழ்வளிப்பவருமாகியவரே; ஆவிகளின் அருட் கொடையாளராம் ஒருவரே மற்றும் மாம்சமான யாவருடைய தேவனே; பாதாளத்தில் இருப்பவர்களை நோக்கிப் பார்க்கிறவரே, மனுஷனுடைய செய்கைகளை பரிசோதித்துப் பார்க்கிறவரே; ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்கிறவரே, நம்பிக்கையிழந்து நிற்பவர்களுக்கு இரட்சகரானவரே; ஒவ்வொரு ஆவியையும் படைத்து மேற்பார்வையிடுகிறவரே; பூமியின் மேலுள்ள ஜாதிகளை பெருகச்செய்கிறவரே, உமது நேச குமாரனாகிய, இயேசுகிறிஸ்து மூலமாக உம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களை தெரிந்தெடுத்தவரே, உமது குமாரன் மூலமாக எங்களை போதிக்கிறவரே, எங்களை பரிசுத்தப்படுத்துகிறவரே, எங்களை மேன்மைப்படுத்துகிறவரே.[12]

ஞானஸ்நானத்தின் சூழலில் கழுவுதல் மற்றும் தண்ணீரைப் பற்றி வேதாகமத்தில் உள்ள அநேக குறிப்புகள் பவுலும் அவருடைய வாசகர்களும் ஞானஸ்நானம் மூலம் கழுவப்பட்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக தெளிவாக்குகிறது. பவுல் தொடர்ந்து கூறியதாவது, நீங்கள் **பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டீர்கள்** (காண்க அப். 22:16; தீத்து 3:5). வெய்ன் ஏ. மீக்ஸ் (Wayne A. Meeks) இங்ஙனம் வார்த்தை அமைத்து கூறினார்:

> தூய்மையான சமுதாயத்திற்குள் நுழைகிற அனைவரும் அப்படியே செய்யவேண்டும் அதாவது, “கழுவப்படவேண்டும்” மற்றும் “பரிசுத்தமாக்கப்பட வேண்டும்” மற்றும் “நீதிமானாக்கப்பட வேண்டும்” (1 கொரி. 6:11). மேலும், முழு சடங்காச்சாரமும் கிறிஸ்துவோடு மரித்து எழுந்திருப்பதை அடையாளப்படுத்துகிறது … தெளிவாக, அப்பொழுது, ஞானஸ்நானம் என்பது ஒரு எல்லையை நிறுவும் சடங்கு.[13]

ஞானஸ்நானத்தை உறுதிப்படுத்துகிற விசுவாசம், அன்பு, மற்றும் கீழ்ப்படிதல் போன்ற உள்ளார்ந்த மனப்பான்மைகளிலிருந்து ஞானஸ்நானத்தின் வெளிப்படையான சடங்குகள் பிரிக்கப்பட முடியாது. தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்பது மனந்திரும்புதலின் ஆவிக்குரிய மனப்பான்மையுடன் இணைக்கப் பட்டுள்ளது.

**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை** அவர் சுட்டிக்காட்டுவது பழைய ஏற்பாட்டில் பவுலுக்கு இருந்த ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்துகிறது. “நாமம்” என்பது கர்த்தருக்குப் பதிலாக பயன்படுத்தப்படுகிறது. இரட்சகருடைய நாமத்தை அழைப்பதினால், கழுவப்படுதல், பரிசுத்தமாகுதல், நீதிமானாகுதல் போன்றவைகளுக்கு இயேசு பிரதிநிதி என்று பவுல் உறுதிப் படுத்தினார்.[14] ஆவியின் மத்தியஸ்தப்பணி தேவனையும் அவரது மக்களையும் இணைத்து ஒரு

உறவை உருவாக்குகிறது. கிறிஸ்துவில் இந்த மக்கள் என்னவாக இருக்கிறார்களென்பது இவ்வுலக மக்களாக இருப்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஃபீ (Fee) கூறியதாவது, “கிருபையின் அனுபவத்திற்கும் கிருபையின் அனுபவத்தை வெளிக்காட்டும் நன் நடத்தைகளுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்பது பவுலின் கருத்து.”[15]

## பாலுறவு பாவத்தை தவிர்த்தல் (6:12-20)[16]

ஒரு கடிதத்தில் வழக்கமான ஒரு ஆய்வு முறையின் முறையான கட்டமைப்பு இருக்காது. ஒரு கடிதத்தில் எழுத்தாளர் முந்தைய மற்றும் பின் வருகிற கருப்பொருள்களில் தெளிவற்ற வகையில் ஒரு சிந்தனையை முன்வைக்கலாம். இப்படி 1 கொரிந்தியர் 6ம் அதிகாரத்தின் கடைசிப் பகுதியில் பவுல் செய்துள்ளார் போல தெரிகிறது. கொரிந்துவில் காணப்பட்ட பாலியல் துஷ்பிரயோகங் களுக்கும் அதைக்குறித்து கிறிஸ்தவர்களின் எதிர்ச்செயலுக்கும் பவுல் தன்னுடைய கவனத்தைத் திருப்பியது ஏன்? தன் தகப்பனுடைய மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந்த மனிதனுடனான மக்களின் ஐக்கியம் பற்றிய பிரச்சனை இன்னும் பவுலின் நினைவில் புதியதாக இருந்தது (5:1), சகோதரனுக்கு விரோதமாக நீதிமன்றத்திற்குச் செல்வதை வேசித்தனத்திற்கும் விக்கிரக ஆராதனைக்கும் இணையாகச் சொன்னார். சபையில் உள்ள சிலர் தேவனோடுள்ள உறவில் இருந்து தங்கள் கிரியைகளை வெறும் சரீரத்தின் கிரியைகள் என்று பிரித்துப்பார்த்தனர். தேவ உறவையும் கைகளின் கிரியையும் பிரித்துப்பார்ப்பதை பவுல் அனுமதிக்கவில்லை. பாலியல் முறைகேடு, பவுல் வாதாடினார், ஒரு தனித்துவமான பலவீனமான பாவம்; அது அவர்களுடைய ஆத்துமாவை ஆழமான மட்டத்தில் பாதிக்கிறது. இது உடலையும், மனதையும், ஆத்துமாவையும் முற்றிலும் மோசமான முறையில் நடத்துகிறது (காண்க 6:18).

கிரேக்க-ரோம கலாச்சாரத்தில், குறிப்பாக கொரிந்துவில், குறைந்த அளவு ஒழுக்கநெறி வாழ்வு முறையே பின்பற்றப்பட்டன என்பதை அதிகமான ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. விபச்சாரம் பரவலாக நடைமுறையில் இருந்தது, பெண் அடிமைகளின் சரீரம் அவர்களின் உரிமையாளர்களுக்கு சொந்தமானதாக கருதப்பட்டது, ஓரினச்சேர்க்கை நிந்திக்கப்பட்டது ஆனால் சகித்துக் கொள்ளப் பட்டது, விவாகரத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது, கருக்கலைப்பு மற்றும் குழந்தைகளை வெளியே தள்ளுதல் போன்றவைகள் பொதுவாக காணப்பட்டது. சில வலுவான வார்த்தைகளை பயன்படுத்தவும், பரவலான பாலியல் ஒழுக்கக்கேட்டிற்கு எதிரான கிறிஸ்தவ எதிர்ச்செயலைப் பற்றிய தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவும் அப்போஸ்தலர் கட்டாயப் படுத்தப்பட்டார்.

### பவுலின் விளக்கம் (6:12-17)

அவிசுவாசிகளுக்கு முன்பாக சகோதரருக்கு விரோதமாக சகோதரர் நீதிமன்ற வழக்குக்கு செல்லும் பழக்கத்தை குறித்த பவுலின் சீற்றம் பொல்லாப்பைக் குறித்த பொதுவான விவாதத்திற்கு வழிகாட்டியது. வேசிமார்க்கத்தார், விக்கிர காராதனைக்காரர், திருடர்கள், விபசாரக்காரர் போன்றவர்களையும் சட்டம் சார்ந்த விஷயங்களில் அநியாயம் செய்தவர்களையும் ஒன்றாக சேர்த்துக்குறிப்பிடுகிறார் (6:9, 10). அத்தகைய காரியங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது; தேவனுடைய ராஜ்ஜியத்தில் அவர்களுக்கு இடமில்லை. கொரிந்துவில் உள்ள சில கிறிஸ்தவர்கள் கடந்த காலத்தில் சிற்றின்பத்தில் மூழ்கிப்போனார்கள்; ஆனால் அவர்கள் கழுவப்பட்டார்கள், பரிசுத்தப்படுத்தப்பட்டார்கள், மற்றும் நீதி மான்களாக்கப்பட்டார்கள்.

கிரேக்க-ரோம உலகில் உள்ள கலைப்படைப்புகள் பாலியல் நடவடிக்கைகள் மீது மக்களுக்கு இருந்த பற்றை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறது. தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களால் தோண்டி எடுக்கப்பட்ட, கலைப்பொருட்கள், குவளை ஓவியங்கள், மற்றும் இலக்கியங்கள் அதே சாட்சியத்தை அளிக்கின்றன. அப்போது வாழ்ந்தவர்கள் இந்த விஷயத்தில் பிரத்தியேக மானவர்கள் அல்ல, ஆனால் அந்த வரலாற்றுக்காலம் மற்ற காரியங்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை விட பாலியல் விருப்பத்திற்கு அதிக சிறப்பு வழங்கப்பட்டதாக தெரிகிறது. பண்டைய கிரேக்க-ரோம உலகத்துடன் நவீன மேற்கத்திய உலகம் சேர்ந்து பொறுப்பற்ற பாலியல் நடை முறைகளில் பங்குபெறுகிறது. பாலியல் ஒழுக்கக்கேடு மற்ற பாவங்களை விட அதிக கொடூரமாக இருந்தது என்பதனால் பவுல் அதைக்குறித்து உரையாற்றவில்லை, ஆனால் அது கலாச்சாரத்தில் மிகவும் பரவலாக இருந்தது மற்றும் சமுதாய ஒழுங்கிற்கும் மற்றும் மக்களின் நலனுக்கும் கேடு விளைவிப்பதாக இருந்தபடியால்.

**12எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும்
எல்லாம் தகுதியாயிராது எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு
அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.
13வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்திற்கு வயிறும் ஏற்கும்;
ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ
வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு
உரியவர். 14தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது
வல்லமையினாலே எழுப்புவார். 15உங்கள் சரீரங்கள் கிறிஸ் துவின்
அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின்
அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச்
செய்யலாகாதே. 16வேசியோடே இசைந்திருக்கிறவன் அவளுடனே**

**ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே. [17]அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.**

**வசனங்கள் 12, 13.** கிறிஸ்தவர்கள் கழுவி சுத்திகரிக்கப்பட்ட மக்கள் என்ற அப்போஸ்தலரின் பார்வை புறஜாதி மக்களின் பரவும் தன்மை கொண்ட உணர்ச்சிகளை நியாயப்படுத்தும் மக்களை அவர் எதிர்த்து நிறகச்செய்தது. அவருடைய உரையின் தொடக்க அறிக்கையில், **எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகார முண்டு**, என்பதை ஒரு தன்னிச்சையான அறிக்கை என்று புரிந்து கொள்ள கடினமாக இருக்கும். அத்தகைய சலுகை பவுலின் வாதத்தை ஆதரிக்காது. சில மொழிபெயர்ப்புகள், NRSV மற்றும் NIV (2011) போன்றவைகள், இச்சொற்றொடரை 12-ஆம் வசனத்தில் தருகிறது, மேலும் மற்றொரு சொற்றொடரை 13-ஆம் வசனத்தில் மேற்கோள் குறியீட்டிற்குள் தருகிறது. அப்படிச் செய்வதினால், பாலியல் ஒழுக்கமின்மையை நியாயப்படுத்தும் நபர்களால் பயன்படுத்தப்படும் கோஷங்களை அப்போஸ்தலர் மேற்கோளிடுவதாக மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர்.

சுயநலமுடையவர்களின் கோஷத்தை பவுல் மேற்கோள் காட்டி பின்னர் அதன் பிழைகளை வெளிப்படுத்தினார்: **ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது**. “சுயாதீனத்திற்கென்று கிறிஸ்து நம்மை விடுவித்தார்,” முன்னர் இப்படி எழுதினார் (கலா. 5:1). உண்மையில், ஒரு விதத்தில், கிறிஸ்தவர் ஒருவருக்கு “எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரமுண்டு”; ஆனால் கிறிஸ்துவின் சீஷர் சட்டத்தை விட அதிக அக்கரை உடையவர். பயனுள்ளவைகளை, பக்தி விருத்திக்கு ஏதுவானவைகளை, வாழ்வை வளமாக்குகிறவைகளை மட்டுமே அவர் செய்ய விரும்புகிறார். பாலியல் ஒழுக்கக்கேடு சட்டப்பூர்வமானது என்று ஒப்புக் கொள்ளாமல், பவுல் சுட்டிக்காட்டுகிறதாவது, அது சட்டப்பூர்வமானதாக இருந்தாலும், அது தகுதியாயிராது. கிறிஸ்தவ கீழ்ப்படிதலின் தன்மையைப் பொறுத்தவரை, ஒரு நடத்தையானது தகுதிக்கான சோதனையில் தகுதி பெறவில்லை எனில், அது சட்டபூர்வமானதாகவும் இருக்க இயலாது. கட்டுப்பாடில்லாத பாலியல் ஈடுபாடு, மற்ற பாவங்களைப் போல, ஒரு நபரை ஒரு வகையில் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. “பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்,” என்று இயேசு சொன்னார் (யோவான் 8:34). பவுல் அறிக்கையிட்டதாவது, **நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்**. அப்போஸ்தலருடைய வாழ்க்கையில் கிறிஸ்துவே எஜமான் ஆவார், மேலும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது என்று அவர் அறிந்திருந்தார்

(மத். 6:24).

**வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்திற்கு வயிறும் ஏற்கும்** என்ற கோஷம் உண்மையில் போஜனத்தைப் பற்றியதல்ல; பசி சாப்பிட தூண்டுவது போல பாலியல் ஆசையும் அதை செயல் படுத்த தூண்டும் என்பதே வாதம். பாலுறவு கொள்ளுதலும் போஜனம்பண்ணுதலும் இயற்கையான ஆசைகள் என்பதால், ஒன்றை செய்வது மற்றொன்றைச் செய்வதை விட பாவம் நிறைந்ததாக கருதப்படுகிறது. பவுல் ஒரு பகுதியை மட்டுமே ஒப்புக் கொண்டார்: எல்லாவிதமான மட்டற்ற சிற்றின்பங்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வெளிச்சத்தில் பார்க்கப்பட வேண்டும் என்பதையே அந்த கோஷம் வலியுறுத்துகிறது. பசிக்கு உணவு என்பது பெருந்தீனிக்கான உரிமம் அல்ல, அதுபோல பாலியல் ஆசை என்பது பாலியல் முறைகேட்டிற்கான உரிமம் அல்ல. இரண்டுவிதமான பசிக்கும் கட்டுப்பாடுடன் நிறை வேற்றப்பட வேண்டும் என்று தேவன் கட்டளை கொடுக்கிறார். சரீரமும் அதனுடைய பசியும் கர்த்தருடையது. கிறிஸ்தவன் ஒருவன் அவருடைய போதனைகளின் அடிப்படையில் அவைகளின்மேல் அதிகாரம் செலுத்தவேண்டும். இந்த சகோதரர்கள் தங்கள் முன்னாள் விக்கிரகாராதனை வாழ்க்கையில் இருந்து எடுத்துச் சென்ற பாலியல் நடைமுறையை நியாயப்படுத்தும் முயற்சியாக இருந்ததால், இந்த கோஷங்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கான தூண்டுதல் அல்ல.

**வசனம் 14.** புதிய ஏற்பாட்டில் உள்ள இறுதியியல் (கர்த்தருடைய இரண்டாம் வருகை, நியாயத்தீர்ப்பு, மற்றும் கடைசிக்கால போதனைகள்) கிறிஸ்தவர்கள் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ எச்சரிக்கிறது. 2 பேதுரு 3:10-12ல் “கர்த்தருடைய நாள்” பற்றிய தனது விளக்கத்தை பேதுரு சொல்லியதாவது, “இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் ... !” அவ்வாறே, பவுலும் சரீரம் கர்த்தருடையது மற்றும் கர்த்தர் சரீரத்திற்கு உரியவர் என்று நினைப்பூட்டி தன்னுடைய வாசகர்களின் கவனத்தை நியாயத்தீர்ப்பு நாளுக்கு திருப்புகிறார்: **தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்.** அவர் மனித குலத்தை எழுப்புகையில், ஒவ்வொருவரும் “கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும்” (2 கொரி. 5:10). அயலகத்தான் ஒரு வனுடைய கரிசனைகளை உதாசீனம் செய்து கட்டுப்பாடற்ற சிற்றின்பம் அனுபவித்தல் என்பது பசிக்கு உண்பதைக்காட்டிலும் அதிகமானது. இது தேவனுடைய நித்திய திட்டத்திற்கு எதிரானது.

**வசனம் 15.** பவுலின் எச்சரிப்புகள் கொரிந்திய கிறிஸ்தவர்களிடையே காணப்பட்ட ஆன்மீக குறை பாடுகளை சுட்டிக்காட்டுகிறதெனில், அவர்களில் சிலர் வேசிகளை பயன்படுத்தி

அவர்களுடைய செயல்களை நியாயப்படுத்தினார்கள் என்று சொல்வது பாதுகாப்பானது. கொரிந்து பட்டணம் வியாபாரத்திற்கும் பிரபல தத்துவங்களுக்கும் மையமான இடமாக காணப்பட்டது. வேறெந்த நகரங்களிலும் ஒப்பிட முடியாத அளவுக்கு விபச்சாரம் கொரிந்து போன்ற வியாபார மையத்தில் பொதுவானதாக இருக்கலாம், ஆனால் ஒவ்வொரு கிரேக்க பட்டணத்திலும் மனித மாம்சத்திற்கான ஒரு சந்தை இருந்தது. இன்றைய உலகில் அதுபோன்ற செயல்கள் நடைமுறையில் இல்லை என்று ஒரு அப்பாவி மட்டுமே சிந்திக்கலாம்.

பாலுறவு தொழிலை நியாயப்படுத்த முயன்றவர்களின் கோஷங்களை அப்போஸ்தலன் தள்ளுபடி செய்திருந்தாலும், அது கர்த்தருடைய மக்களுக்கு மன்னிக்க முடியாத ஒன்று என்று வாதிட்டார். கிறிஸ்தவர்கள் தன் மக்களை பாவத்திலிருந்து மீட்ட இரட்சகரோடு ஒரு ஒற்றுமையை பகிர்ந்து கொள்கிறார்கள். சரீரத்தையும் ஆவியையும் ஒரே தொகுதியாக பார்க்கிறார் அப்போஸ்தலர். **உங்கள் சரீரங்கள்**, அப்போஸ்தலர் பிரகடனம் செய்தார் - “உங்கள் ஆவிகள்” அல்ல, ஒருவனுடைய ஆவி ஒரு தனியான உட்பொருள் போல - **கிறிஸ்துவின் அவயவங் களாயிருக்கிறது**. தனியொருவர் செய்கிறது என்ன, நன்மை யானதோ அல்லது தீமையானதோ, கிறிஸ்துவின் சரீரம் செய்கிறது. இக்கடிதத்தின் பிற்பகுதியில், பவுல் எழுதினார், “நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங் களாயுமிருக்கிறீர்கள்” (12:27). சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் வெவ்வேறு தனிப்பட்ட நடத்தையில் பங்கெடுக்கிறார்கள்; இதுதான் தேவன் சபையை வடிவமைத்த விதம். 6:15ல் சொற்திறன் படைத்த கேள்வியில், பாலுறவு தொழிலின் மகத்தான தாக்கத்தை பவுல் கவனத்தில் எடுத்துக் கொண்டார்: **நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா?** அந்த கேள்வியில் தானே ஒரு சீற்றம் இருந்தது. **அப்படிச் செய்யலாகாதே** [μὴ γένοιτο, *mē genoito*]! என்று அப்போஸ்தலர் பதிலளித்தார். கிறிஸ்தவருக்கு, ஒழுக்கமுறைகளை தெரிந்துகொள்வது தன்னைச் சார்ந்தது மட்டுமல்ல. ஒவ்வொருவரின் நடத்தை அனைவருக்கும் நீட்டிக்கப்படுகிறது.

**வசனம் 16.** ஒருவர் செய்கிற காரியம் முழு மனிதனையும் உடல்ரீதியாக பாதிக்கிறது. ஆவிக்குரிய விசுவாசம் மற்றும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதல் போன்றவைகளிலிருந்து ஞானஸ் நானத்தின் இயல்பான செயலை பிரிக்க முடியாதது போலவே, சரீரத்தில் செய்யப்பட்ட செயல்களையும் கிறிஸ்துவிடம் உள்ள ஆன்மீக முடியாது. **வேசியோடே இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா?** என்று பவுல் கேட்டார். கிறிஸ்தவருடைய சரீரம் விசுவாசிகளின் சமுதாயத்தில் பிணைக்கப்பட்டுள்ளது, மற்றும் கிறிஸ்தவர்கள் ஒருமித்து கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறார்கள்.

> அவர் கொரிந்தியர்களுக்கு நினைப்பூட்டியது என்ன வெனில், அவர்களே ("எங்களுக்கு" - 6:14) கிறிஸ்துவின் அவயவங் களாயிருக்கிறார்கள் - ஆனால் அவர்கள் உருப்பெற்ற மனிதர் களாகவே தங்களை கருதுகின்றனர், அவர்களுடைய சரீர ஈடுபாடுகள் அர்ப்பணிப்பு மற்றும் சீஷத்துவத்தின் தன்மையையும் தரத்தையும் சுட்டிக்காட்டுகின்றன.[17]

வேசித்தனம், 6:16ல், பவுலின் வாதத்தின்படி, என்பது வெறும் சரீரம் சார்ந்த ஒரு செயல் அல்ல. அவர் ஆதியாகமம் 2:24 ஆம் வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்: **இருவரும் ஒரே மாம்சமாயிருப் பார்கள்.** என்று சொல்லியிருக்கிறதே. வேசியோடு இசைதல் அப்பாவத்தை செய்கிற ஒருவரின் முழுமையை கறைப்படுத்துகிறது. வேசியுடன் பாலுறவு கொள்ளுவது என்பது கிறிஸ்துவின் சரீரத்தை முறை கேடுகளோடு இணைப்பது ஆகும். பவுல் கோட்பாட்டளவில் பேசவில்லை; விபச்சாரம் கிரேக்க பட்டணங்களின் குடிமை மற்றும் சமய வாழ்வில் ஆழமாக மூழ்கியிருந்தது. மக்களை அவமதித்து ஒருவரை மற்றொருவரின் உடல் திருப்திக்காக பயன்படுத்துவது போன்ற நடைமுறைகளை சிலர் இன்று நியாயப்படுத்துகிறார்கள், ஆனால் அத்தகைய முயற்சிகள் வேதாகம நெறிகளை குறைவாக மதிப்பிடுகிறது. "எந்தவிதமான நீடித்த விளைவுகளும் இல்லாத சாதாரண பாலுறவு என ஒன்று இல்லை, ஒரு பரஸ்பர தொடர்பை உருவாக்குவதற்கான எண்ணம் கூட்டாளியிடம் இல்லாதபோதும் கூட."[18] இந்த சகோதரர்கள் அவர்கள் கிறிஸ்துவின் சரீரம் என்றும் தங்களை பரிசுத்தமாக காத்துக் கொள்ள வேண்டும் என்றும் "அறியாதிருந்தார்களா?" அவர்கள் நிச்சயமாக அறிந்திருந்தனர்!

**வசனம் 17.** ஒரு மனிதன் வேசியோடு இசைவதையும் ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு இசைவதையும் குறிப்பிட பவுல் ஒரே வார்த்தையை (κολλάομαι, *kollaomai*) பயன்படுத்துகிறார். முன்னர் கர்த்தரோடு இசைந்திருந்தவன் வேசியோடு இசைந்திருப்ப தென்பது கிறிஸ்துவையும் அவருடைய மக்களையும் முற்றிலும் கேலிக்குரியதாக்குதல் ஆகும். கர்த்தருக்கு சொந்தமாகுதல் என்பது அவருடனே **ஒரே ஆவியாயிருப்பது** ஆகும். பின்னர் வேசியோடு இசைவது என்பது கிறிஸ்துவுடனான ஐக்கியத்தின் ஒருமைப் பாட்டை பொய்யாக்குதல் ஆகும்.

## பவுலின் அறிவுரைகள் (6:18-20)

**[18]வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான். [19]உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினு டைய ஆலயமாயிருக்கிறதென்றும்,**

**நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும், அறியீர்களா? 20கிரயத்துக்குக் கொள்ளப் பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்.**

**வசனம் 18.** சரீரத்தில் செய்யப்படுகிற பாலியல் ஐக்கியம் ஒரு தனித்துவம் வாய்ந்த பாவம். நெருங்கிக் கொண்டிருந்த விரக்தியை கட்டாயப்படுத்தி, அப்போஸ்தலர் வலியுறுத்தினார், **வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்.** பாலியல் ஒழுக்கக்கேடு மட்டுமே ஒரு மனிதனை முறைகேடான மனிதனாக்குவதில்லை; பவுல் அதை ஒரு தனித்துவம் நிறைந்த அழிவுகரமானதாகவே கண்டார். பாலியல் பாவம் ஒருவருடைய சரீரத்தை கைப் பற்றுவதினால் அது தனித்துவம் வாய்ந்த பாவம் ஆகும். **மனுஷன் செய்கிற எந்தப் பாவமும்**, பவுலின் கூற்றுப்படி, **சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்**, ஆனால் **வேசித்தனம் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.** வெறுமனே செய்யும் ஒரு செயலை விட, பாலியல் ஒழுக்கக்கேடு ஒரு நபரின் முழுமையையும் ஈடுபடுத்துகிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச்சார்ந்த ஒரு யூத ஆவணத்தின் ஒரு பகுதி, அதன் பெயர் என்னவெனில், "சிமியோனின் ஏற்பாடு, யாக்கோபுக்கும் லேயாளுவுக்கும் பிறந்த இரண்டாம் குமாரன்," எச்சரிப்பதாவது, "பாலியல் நடவடிக்கைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றுங்கள், ஏனெனில் வேசித்தனமே எல்லா துன்மார்க்கமான செயல்களுக்கும் தாய்; அது மனிதனை தேவனிடத்தில் இருந்து விலக்கி பொய்யனாகிய பிசாசினிடத்திற்கு நடத்திச்செல்கிறது."[19] பவுல் கேட்டிருக்கக் கூடும், "சரீரத்திற்கு புறம்பே மனிதன் யார்?" பாலியல் பசியை பராமரிப்பதன் விளைவு சுயஅழிவு என்பதில் ஐயமில்லை. உடைக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நொறுக்கப்பட்ட ஜீவன்கள் பவுலின் பார்வைக்கு சான்றாக விளங்குகின்றன. வேத வசனங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்ட ஞானத்தை ஜிம்மி ஆலன் பகிர்ந்து கொண்டார்: "தற்போது துன்மார்க்கர்கள் தங்கள் பாவத்தால் தண்டிக்கப்படும் அளவிற்கு சமுதாயத்தினால் தண்டிக்கப்படுவதில்லை."[20]

**வசனம் 19.** பவுல் **நீங்கள் ... அறியீர்களா?** என்று எழுதின போது அதன் பொருள் என்னவெனில் "நீங்கள் நிச்சயமாக அறிவீர்கள்." முன்னர், பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களை நினைப்பூட்டி சபையின் ஒருமைப்பாட்டை குறித்து வலியுறுத்திச் சொன்னதாவது, அவர்கள் எல்லாரும் ஒருமித்து, தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள் (3:16, 17; காண்க 2 கொரி. 6:16). "தேவனுடைய ஆலயம்" மற்றும் **பரிசுத்த ஆவியினுடைய ஆலயம்** ஆகிய இரண்டுக்குமிடையே வேறுபாடுகளை பவுல் உண்டாக்கவில்லை. இரண்டு சொற்றொடர்களும் ஒன்றுக்கொன்று மாற்றி மாற்றி பயன்படுத்தப்படுகின்றன. சபை கூட்டாக தேவன் வாசம்பண்ணும் இடமாக விளங்குகிறது ஆனால்

பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு தனி நபரின் உள்ளத்தில் வாசம்செய்கிறார். கூட்டாகவும் தனித்தனியாகவும், பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும், பரிசுத்த ஆவியாகிய தேவனும் விசுவாசிகளிடம் வாசம் செய்கிறார். வாசம் செய்யும் பிரதிநிதியின் பிரசன்னத்திலும் பெலத்திலும் விசுவாசிகள் இரண்டற கலந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. விசுவாசம் (2 தீமோ. 1:5), தேவன் (2 கொரி. 6:16), ஆவியானவர் (ரோமர் 8:11), வார்த்தை (கொலோ. 3:16), அல்லது கிறிஸ்து (கொலோ. 1:17) இவைகளில் யார் வாசமாயிருந்தாலும், ஊடுருவும் செல்வாக்கு உண்டாயிருக்கிறது.

தற்கால சூழ்நிலையில், அப்போஸ்தலர் ஒரு தனிநபரின் உண்மையான சரீரத்தை குறித்து எழுதுகிறார். ஒரு நபருடைய சரீரம் ஒரு வேசியின் சரீரத்தோடு இசையக்கூடாதென்று காண்பிக்கிறார். 3:16, 17, இல் உருவகப் பேச்சை பயன்படுத்தி, முழுமையான சபையையும் தேவனுடைய ஆலயமாக பவுல் குறிப்பிடுகிறார். 6:19இல் மற்றொரு உருவகத்தைப் பயன்படுத்தி, தனிநபர்களின் கூட்டத்தை “பரிசுத்த ஆவியின் ஆலயம்”[21] என்று பவுல் பிரகடனம் செய்கிறார். ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட சரீரமாகிய சபைக்கும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஒரு வரம் ஆகும் (காண்க அப். 2:38; கலா. 4:6). ஆவியானவர் வாசமாயிருப்பது தேவன் உரிமையாளர் என்பதற்கு அடையாளம் ஆகும். சபை கூட்டாகவோ அல்லது ஒவ்வொரு விசுவாசியும் “தேவனுடைய ஆலயம்” அல்லது “ஆவியானவரின் ஆலயம்” என்றோ அழைக்கப்படலாம். எப்படியானாலும், தெய்வீகத்தினால் நிரப்பப்பட்ட நபர் ஒருவர் வேசியோடு இசைந்திருப்பது நினைத்துப் பார்க்கக்கூட முடியாததென்று பவுல் கண்டார்.

**வசனம் 20.** சரீரமாகிய சபையில் உள்ள கிறிஸ்தவர்களுடைய ஈடுபாடு, கொரிந்துவிலிருந்த ஒவ்வொரு நபரின் ஒழுக்கக்கேடும் அல்லது தேவபக்தியும் முழு சபையினரின் அவமதிப்பாகவோ அல்லது மகிமையாகவோ என்று இருந்தது. கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட நடத்தை அவர்களை ஆளுகை செய்த கர்த்தரை பிரதி பலித்தது மட்டுமல்ல, மற்றொரு முக்கியமான காரணம் என்னவெனில் கிறிஸ்தவர்கள் “வேசித்தனத்திற்கு விலகு” என்ற கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்கள் (6:18). அவர்கள் **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.** அவர்கள் அவர்களுக்கு சொந்த மானவர்கள் அல்ல. அவர்கள் வாங்கப்பட்ட விலை - நம்முடைய விலையைப் போல - ஆட்டுக்குட்டியானவரின் விலை மதிப்பற்ற இரத்தம் (காண்க யோவான் 1:29; 1 பேதுரு 1:18, 19).

கிரேக்க-ரோம வாழ்வில் அடிமைத்தனம் என்பது வாழ்வின் அன்றாட பகுதியாக இருந்தது, “கிரயத்துக்குக் கொள்ளப்

பட்டிருக்கிறீர்கள்" என்பதன் பொருளை இன்றைய வாசகர்களை விட பவுல் காலத்து வாசகர்கள் எளிதாக புரிந்து கொள்ளுவார்கள். கொரிந்துவில் உள்ள கிறிஸ்தவர்களின் சிலர் உண்மையில் மற்றவர்களுக்கு சொந்தமானவர்களாக இருந்தனர் (காண்க 7:21, 22). "விலைக்கு வாங்கப்பட்டீர்கள்" என்ற குறிப்பு, கட்டாயத்திற்கு அடிப்படையை தருகிறது: **ஆகையால் ... உங்கள் சரீரத்தினால் ... தேவனை மகிமைப்படுத்துங்கள்.** கிறிஸ்துவின் கிருபையின்மேல் நம்பிக்கை வைக்கிற யாவருக்கும் கிறிஸ்துவுக்கான சரியான எதிர்ச்செயல் என்னவெனில் ஆத்துமாவிலும் சரீரத்திலும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதல் ஆகும்.

## நடைமுறை பயன்பாடு

### கிறிஸ்தவர்களும் நீதிமன்றங்களும்

பவுல் மற்றும் அவரது முதல் வாசகர்கள் வாழ்ந்த கிரேக்க-ரோம உலகில் இருந்ததை விட ஆளுமை, சட்டம் மற்றும் ஒழுங்கு, நீதிமன்ற முறைமை மற்றும் சமூக நிறுவனங்கள் இன்றைய தினங்களில் மிகவும் வேறுபட்டவை. அதன்படி, சகோதரர் சகோத ரருக்கு விரோதமாக நீதிமன்றத்திற்குச் செல்வதை குறித்த பவுலின் அறிவுரைகளை எல்லா கலாச்சாரத்திலும் கடைப்பிடிப்பது கடினம். ஆகவே பவுலின் வார்த்தைகளை ஜாக்கிரதையோடு உபயோகிக்க வேண்டும்.

சொத்துக்களை அல்லது வேறொருவரின் உரிமையைக் கோர தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த கையிலெடுக்கும் தரப்பினருக்கு சட்ட பூர்வமான சிக்கல்கள் உண்டு. சட்டபூர்வமானது என்பது ஒழுக்க ரீதியில் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பணபலம் மற்றும் செல்வாக்கு உடையவர்களால் தங்கள் அயலகாத்தாருடைவைகள் மீது உரிமை கோரலாம். ஒருவருடைய பயனற்ற தன்மை, அறியாமை, அல்லது வறுமை போன்றவைகளை மற்றொருவர் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வது தேவனுடைய கோபத்தை வரவழைக்கும். ஆகாப் ராஜா நாபோத்துக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டத்தை இச்சித்தான் (1 இராஜா. 21:1, 2). நாபோத் அத்தோட்டத்தை ஆகாப்பிற்கு விற்க மறுத்தபடியால், ஆகாப்பின் மனைவி யேசபேல் நாபோத்திற்கு விரோதமாக பொய் சாட்சிகளை விலைக்கு வாங்கி அவனை கல்லெறிந்து கொன்றாள். ராஜஜோடி தங்கள் பாவத்திற்கான சம்பளத்தை செலுத்த வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார் (1 இராஜா. 21:9-23).

மாறாக, நன்கு திட்டமிடுகிற இரண்டு மக்கள் ஒரே சூழ்நிலையை வித்தியாசமாக பார்க்கக்கூடும். அவர்கள் இருவரும் தங்கள் பார்வையில் சரியானவர்கள் என்று நம்பலாம். இருதரப்பினரும் கிறிஸ்தவர்களாக இருந்தால், ஒவ்வொருவரும் விட்டுக் கொடுக்க

தயாராக இருந்து, ஒருவருக்கொருவர் நியாயமான மனிதர்களாகப் பேசிதீர்வு காணும்படி பவுல் அறிவுரை வழங்குகிறார். அத்தகைய வாதங்கள் சகோதரர்களுக்குள்ளே ஒரு தடையாக இருப்பதைக் காட்டிலும், "பொறுத்துக் கொள்ளுகிறது" நல்லது என்று பவுல் குறிப்பிடுகிறார் (1 கொரி. 6:7). பரஸ்பர ஒப்பந்தத்தை அடைய முடியாவிட்டால், சகோதரர்கள் சபைக்கு ஞானிகளுக்கு முன்பாக தங்கள் வழக்கை முன்வைக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் வலியுறுத்தினார். கிறிஸ்துவின் ஆவியோடு இரு தரப்பினரும் அவர்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தீவிரமான வழக்குகளில் மட்டுமே ஒரு விசுவாசி சகோதரருக்கு விரோதமாக மதச் சார்பற்ற நீதி மன்றத்தில் வழக்குத் தொடுப்பதை நியாயப்படுத்த முடியும். விவாதத்தில் ஒரு தரப்பினர் நல் லெண்ணத்தோடு கூடிய பேச்சு வார்த்தையை நிராகரிக்கும் பட்சத்திலும் சக கிறிஸ்தவனின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுக்கும் பட்சத்திலும், இதை கடைசி ஆயுதமாக பயன்படுத்தலாம். அப்படிப்பட்ட வழக்குகளில் ஈடுபடுவது தோல்வியில் முடியும் (6:7). கர்த்தருடைய சபைக்கு களங்கம் எற்படுத்துகிற அது போன்ற நபருக்கு தேவையான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

## அவமானம் மற்றும் மரியாதை

அவமானம், குற்றவுணர்வு, மரியாதை, பெருமை, நல் மனச்சாட்சி ஆகியவை உளவியல் ரீதியிலும் சமூக பரிமாணத்திலும் உள்ளன. உளவியல் ரீதியாக, ஒரு நபர் உள்ளான, தனிப்பட்ட பெருமையின் உணர்வுகள் அல்லது ஒரு நடத்தை அல்லது நடவடிக்கையை குறித்த குற்ற உணர்வு உடையவராக இருக்கலாம். அதே நேரத்தில், அவர் செய்ததைப் பற்றி பிறர் என்ன நினைப்பார்கள் என்பதை அவர் கவனித்திருக்கக் கூடும். ஒருவர் தன்னுடைய நண்பர்களாலும் குடும்பத்தினராலும் எங்ஙனம் பார்க்கப்படுகிறார் என்பதன் பிரதிபலிப்பே அவமானம் மற்றும் மரியாதை. குற்ற உணர்வு அல்லது நல் மனச்சாட்சியை குறித்த பழங்கால கிரேக்க-ரோம மக்களின் புரிந்துகொள்ளுதல் நவீன கலாச்சார மக்களின் புரிந்துகொள்ளுதலில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. இந்த குணங்களின் சமூக பரிமாணங்கள் தற்காலத்தைவிட பழங்காலத்தில் அதிகமாக இருந்தது குறிப்படத்தக்கது. பின்வரும் பழைய யூத ஜெபத்தில் சமூக நிலைப்பாட்டின் அக்கரையை நாம் காணலாம்: "பாவத்தின் கைகளிலும், அக்கிரமக்காரரின் கைகளிலும், சோதனையின் கைகளிலும், அவமரியாதையின் கைகளிலும் என்னைக் கொண்டு வராதேயும்."[22]

"உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன்" (6:5) என்று பவுல் கொரிந்தியருக்கு சொன்னபொழுது, சில சிறிய,

உள்நோக்க குரல் அவர்களைக் கண்டனம் செய்யும் என்று அவர் அவர்களிடம் சொல்லவில்லை. பவுலுக்கும் அவருடைய முதல் வாசகர்களுக்கும் அவமானம் என்பது ஒரு தனி மனிதனுடைய விஷயம் அல்ல. மற்ற சபைகளுக்கு முன்பாகவும் அவிசுவாச மக்களுக்கு முன்பாகவும் வெளிப்படையான பாவம் கிறிஸ்தவ சமுதாயத்தின் மீது அவமானத்தை கொண்டுவருகிறது. சகோதரருக்கு விரோதமாக சகோதரர் நீதிமன்றத்திற்குச் சென்ற போது, சபையின் புகழ் ஒட்டுமொத்தமாக அழிந்தது. ஆகவே அவமானம் என்பது ஒரு சமுதாயத்தைச் சார்ந்த விஷயம்.

இரட்சிக்கப்பட்ட உறவில் தேவனுடன் வாழ்வதற்கு விசுவாசத்தின் உளவியல் மற்றும் சமூக பரிமாணங்கள் மிகவும் முக்கியம். இருப்பினும், பல நூற்றாண்டுகளுக்கு மேலாக, கிறிஸ்தவ மனச்சாட்சியில் சமூக பரிமாணம் குறைந்துவிட்டது. பொதுவான கேள்வி "இயேசு உங்களுடைய தனிப்பட்ட இரட்சகராக இருக்கிறாரா?" என்பது கர்த்தரைப் பற்றி ஒருவர் எப்படி உணர்கிறார் என்பதைக் காட்டுகிறது மற்றும் சபை வாழ்க்கை எந்த விளைவையும் ஏற்படுத்தாது. மாறாக, ஒரு கிறிஸ்தவராக இருப்பது விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்வதை வலியுறுத்துகிறது, ஒரு சபையின் முக்கிய பகுதியாக பணிவிடை செய்வது அமைகிறது (காண்க 1 கொரி. 12:12, 13). அவமானம், குற்ற உணர்வு, மரியாதை, பெருமை, அல்லது நல்மனச்சாட்சி போன்றவைகளை அனுபவித்தல் என்பது ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தில் இருப்பதைப் போன்றது.

## ஓரினச்சேர்க்கை

"தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை" என்று பவுல் குறிப்பிட்டவர்களில் "சுய புணர்ச்சிக்காரர்" மற்றும் "ஆண்புணர்ச்சிக் காரர்" ஒரு பகுதியினர் (6:9). அதன் பொருள் மிகத் தெளிவாக இருக்கிறது. "ஆண்கள் ஆண்களோடு பாலியல் தொடர்பு வைத்திருப்பதை" குறிப்பிடவே NASB மொழி பெயர்ப்பாளர்கள் "ஆண்புணர்ச்சிக்காரர்" என்ற வார்த்தையை பயன்படுத்தினார்கள். வேத வாக்கியங்களின் அதிகாரம் அல்லது வேதாகமம் தேவ ஏவுதல் போன்றவைகளை குறித்து ஒருவர் நம்புவது எதுவாயிருந்தாலும், ஓரினச்சேர்க்கை பழக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஒழுக்கநெறியைப் பற்றி வேதாகமம் நடுநிலை வகிக்கிறது என்று ஒருவரும் வாதிட முடியாது.

தேவன் அவர்களை அப்படி படைத்திருக்கிறார் என்று உறுதிப்படுத்துவதன் மூலம் ஓரினச்சேர்க்கை நடைமுறையை நியாயப்படுத்த முயலுகிறார்கள். அவர்களின் வாதம் என்னவெனில் ஓரினச்சேர்க்கை என்பது உள்ளார்ந்தது, முடி நிறம் அல்லது தோற்றம் உள்ளார்ந்தது போன்றது. ஓரினச்சேர்க்கையில் ஈடு படுவது என்பது இயற்கையான முடி நிறத்தைப் போல உள்ளார்ந்த குணம் அல்ல என்று

கிறிஸ்தவர்கள் வலியுறுத்துகிறார்கள், ஏனெனில் ஓரினச்சேர்க்கையை பின்பற்ற அல்லது பின் பற்றாமலிருக்க ஒருவர் தெரிந்துகொள்ளலாம். ஒரு பழக்க வழக்கத்தின் திறமைக்கான நடவடிக்கை ஒரு தனித்துவமான தன்மைகளால் நிர்ணயிக்கப்பட்டிருந்தால், சரியானது மற்றும் தவறானது எல்லா அர்த்தத்தையும் இழந்து விடும். ஒருவர் மற்றொருவரைவிட அதிக இச்சையோடு பிறந்தார் என்ற கருத்தை நம்பலாம், எனவே அவரைப் பொறுத்தவரையில் திருடுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது. குழந்தையிடம் தவறாக நடப்பவர் அல்லது தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை என்று சொல்லுகிற ஒருவன் முறையாளர் போன்றவர்கள் இதுபோன்ற நியாயப்படுத்தலை பயன்படுத்தலாம்.

முழு அளவில் ஈடுபடுகிற ஓரினச்சேர்க்கையாளர்கள் தங்கள் வாழ்க்கை முறையை தேர்ந்தெடுக்க அவர்களுக்கு உரிமை உண்டு என்று வலியுறுத்துவது மட்டுமல்ல, ஆனால் எல்லோரும் அவர்கள் பழக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதுகின்றனர். இருப்பினும், வேதாகமம் அதைக்குறித்து தெளிவாக சொல்லுகிறது. வேறு படுத்துதல், வன்முறை, தடைச்சட்டம் போன்றவைகளால் ஓரினச்சேர்க்கை பழக்கத்திற்கு முடிவு கட்ட இயலாது; ஆனால் வேதாகமம் பாவம் என்று குறிப்பிடுகிறவைகளை நடைமுறைப்படுத்துகிறவர்கள் கிறிஸ்தவர்கள் அவைகளை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று வலியுறுத்துகிறார்கள், அதினால் அவர்கள் மற்றவர்களின் உரிமைகள் மற்றும் மனச்சாட்சியை மீறுகின்றனர். திருமணம், வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளபடி, ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நடப்பது (ஆதி. 2:24; மத். 19:5). ஒருவருடைய ஓரினச்சேர்க்கைப் பழக்கம் அவர் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதற்கு தடையாக இருக்கிறது.

---

குறிப்புகள்

[1]இந்த பகுதியின் தலைப்பு *Abundant Life Bible, New Living Translation*, 2nd ed. (Wheaton, Ill.: Tyndale House Publishers, 2004), 873லிருந்து எடுக்கப்பட்டது. [2]Wayne A. Meeks, *The First Urban Christians: The Social World of the Apostle Paul*, 2nd ed. (New Haven, Conn.: Yale University Press, 2003), 129. [3]David E. Garland, *1 Corinthians*, Baker Exegetical Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Baker Academic, 2003), 197. அவருடைய கோரிக்கையை ஆதரிக்கும் பண்டைய ஆதாரங்களை Garland மேற்கோள் காட்டியிருக்கிறார். [4]Cicero *Against Verres* 1.1.1. [5]Emil Schürer, *The History of the Jewish People in the Age of Jesus Christ*, rev. and ed. Geza Vermes, Fergus Millar, and Martin Goodman (Edinburgh: T. & T. Clark, 1986; reprint, London: Bloomsbury, 2014), 3:119. [6]Ibid., 3:119-20. [7]Gordon D. Fee, *The First Epistle to the Corinthians*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 233. [8]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3rd ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 613. [9]David E. Malick, “The Condemnation of Homosexuality in 1 Corinthians 6:9,” *Bibliotheca Sacra* 150 (October-December 1993): 490. [10]Stanley J. Grenz,

*Sexual Ethics: A Biblical Perspective* (Dallas: Word Publishers, 1990), 206.

[11]Ben Witherington III, *Conflict and Community in Corinth: A Socio-Rhetorical Commentary on 1 and 2 Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 166. [12]*1 Clement* 59.3. [13]Meeks, 102. [14]"கழுவப்படுதல்" மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றை தவிர்ப்பதற்கு சரியான பதில் செலுத்தும் முயற்சிகள் தேவைப்படும் என்ற விளக்கவுரைக்கு Fee பதில் செலுத்த வேண்டும். (Fee, 246-47.) மற்றவற்றுடன், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் பெரும்பாலும் ἐν (*en*) மற்றும் εἰς (*eis*) முன்மாதிரிகளை பரிமாறிக்கொண்டதாக நன்கு அறியப்பட்டிருக்கிறது. "நாமத்திற்குள்" என்று பயன்படுத்துவதற்கு பதிலாக பவுல் "நாமத்தினாலும்" என்று பயன்படுத்துவது "ஞானஸ்நானத்தை" புறக்கணிக்க எந்த காரணத்தையும் அளிக்காது. ஞானஸ்நானம், கழுவுதல், மீளுதல் ஆகியவை தீத்து 3:5ல் நெருக்கமாக இணைந்திருக்கின்றன. பேதுரு புதிய மறுபிறப்பைப் பற்றிய குறிப்புகளில், ஞானஸ்நான மொழியை கருத்துரையாளர்கள் சரியான காரணியாக இருக்கிறது என்று அறிந்தாரகள் (1 பேதுரு 1:23-2:3). [15]Ibid., 248. [16]இந்த பகுதியின் தலைப்பு *Abundant Life Bible, New Living Translation*, 2nd ed. (Wheaton, Ill.: Tyndale House Publishers, 2004), 873லிருந்து எடுக்கப்பட்டது. [17]James D. G. Dunn, *The Theology of Paul the Apostle* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1998), 58. [18]Garland, 234. [19]"Testaments of the Twelve Patriarchs," 5.3, trans. H. C. Kee, in James H. Charlesworth, ed., *The Old Testament Pseudepigrapha* (Garden City, N.Y.: Doubleday & Co., 1983), 1:786. [20]Jimmy Allen, *Survey of Romans*, 7th ed. (Searcy, Ark.: By the author, 1994), 105.

[21]பவுல், "உங்களில்" என்ற இரண்டாவது நபருக்காக பன்மையில் பிரதி பெயர்களைப் பயன்படுத்தியிருந்தாலும் இது உண்மைதான். கொரிந்துவிலிருந்த எல்லா கிறிஸ்தவர்களுக்கும் என்ன உண்மையோ அது தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் உண்மைதான். [22]Talmud *Berakoth* 60b.